MODERN GOVERNMENTS -II

Code:18K2HAH2

# இங்கிலாந்து அரசியலமைப்பு.

உலகத்திலுள்ள அரசியலமைப்புகளில் எல்லாம் தொன்மையானது இங்கிலாந்து அரசியலமைப்பு ஆகும். மற்ற நாடுகளில் உள்ள அரசியலமைப்புகளுக்கெல்லாம் முன் மாதியாகத் திகழ்கிறது. 'பாராளுமன்றங்களின் தாய் ' என்று இங்கிலாந்து பாராளுமன்றம் அழைக்கப்படுகிறது. உலகிலேயே எழுதப்படாத அரசியலமைப்பு இங்கிலாந்தில் மட்டும் தான் உள்ளது. ஜான் மன்னருக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மாக்ன கார்டா (Magna Carta, 1215) என்னும் பெரிய உடன் படிக்கையே இங்கிலாந்தின் அரசியலமைப்புகளின் முதல் படியாகும். அன்று முதல் அது படிப்படியாக வளர்ந்து இன்று சுமார் 784 வயதுடையதாக விளங்குகிறது.

**இங்கிலாந்து அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகள்:**

இங்கிலாந்து அரசியலமைப்பு 'கீழ்க்கண்ட சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளது.

**1) எழுதப்படாத அரசியலமைப்பு:**

அரசியலமைப்புகளின் தன்மையில் வைத்துப் பார்க்கும் போது இங்கிலாந்து அரசியலமைப்பு ஒரு எழுதப்படாத அரசியலமைப்பாகும், இருப்பினும் ஒரு சில பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக மகாசாசனம், உரிமைகள் மசோதா, உரிமை விண்ணப்பம் ஆகியவை ஆகும். மேலும் அரசியலமைப்பில் வழக்கங்களும், வழக்காறுகளும் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

**2) சுழிவு நெளிவுள்ள அரசியலமைப்பு:**

இங்கிலாந்து அரசியலமைப்பானது எளிதில் மாற்றக் கூடியதும் நெகிழ்வுத்தனமையைக் கொண்டதுமான அரசியலமைப்பாகும். இதன்

பிரிவுகளை மாற்றுவதற்கு எளிதான முறையே பின்பற்றப்படுகிறது .அதாவது சாதாரணச் சட்டங்களைத் திருத்துவதற்குக் கையாளப்படும் முறையே அரசியலமைப்பைத் திருத்தவும் கையாளப்படுகிறது.

**(3) தொடர்ச்சியாக வளர்ந்து வரும் அரசியலமைப்பு:**

இங்கிலாந்து அரசியலமைப்பு யாராலும் உருவாக்கப்பட்டது அல்ல. அது தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டே வரும் தன்மை கொண்டுள்ளது.அது முற்றுப்பெற்ற ஒன்றல்ல. மன்றோ என்பவர், அறிவும யோகமும் உள்ள ஒரு குழந்தைக்கு இங்கிலாந்து அரசியலமைப்பை உவமைப்படுத்திக் கூறுகிறார். எதிாபாராத சம்பவங்களாலும், மாறிவரும் சூழ்நிலைக்குத் தக்க படியும், மக்களின் எண்ணத்திற்கு ஏற்றவாறும் அது வளர்ச்சியடைந்து வருகிறது. பல நூற்றாண்டுகளின் வளர்ச்சியின் விளைவுதான் இன்றைய இங்கிலாந்து அரசியலமைப்பு ஆகும்.

**4)ஒற்றை ஆட்சி முறை அரசியலமைப்பு:**

இங்கிலாந்தின் அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறை அரசியலமைப்பு ஆகும். எனவே அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பங்கிடப்பட வேண்டிய அவசியம் இல்லை. நாடு பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் எல்லா அதிகாரங்களும் லண்டன் நகரில் இயங்கும் அரசாங்கத்திடமே உள்ளது. மேலும்

பாராளுமன்றம் நாடு முழுவதற்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.

**5.வரையறுக்கப்பட்ட முடியாட்சி முடியுடைய குடியரசு:**

இங்கிலாந்தின் அரசானது வரையறுக்கப்பட்ட முடியாட்சியாகும். கொள்கையளவில் (ஆங்கில அரசு முழுமையான அதிகாரம் பெற்ற முடியாட்சியாகும். ஆனால் அமைப்பு முறையோ வரையறுக்கப்பட்ட.

முடியாட்சியாகும். இங்கு பாராளுமன்ற முறையிலான ஆட்சி முறையே முடியாட்சியாகும்.மந்திரிசபையிடம்தான் உண்மையான அதிகார்ம் நடைமுறையில் உள்ளது. மந்திரிசபையிடம் கால் உள்ளது. தற்போது இரண்டாம் எலிசபெத் இங்கில உள்ளார். நாட்டின் எல்லா அதிகாரங்களுமே அரசியாரின் பெயரிலே நடைபெறுகிறது.இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக உள்ளார்.

**6) பாராளுமன்ற ஆட்சி முறை** :

இங்கிலாந்தில் நடைமுறையில் பாராளுமன்ற ஆட்சி உள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும். பாராளுமன்றத்திற்கு சட்டம் இயற்றுவதற்கான முழு அதிகாரம கொடுக்கப்பட்டுள்ளது.மன்னராட்சியை அழிக்கவோ, அவரைப் பதவியிலிருந்து நீக்கவோ, அல்லது எந்த விதமான சட்டத்தை ஆக்கவோ அழிக்கவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை செல்லாது என்று தீர்ப்புக் கூற நீதிமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது அரசியும் அச்சட்டத்திற்கு எதிராக தன் வீட்டோ ' (Veto) அதிகாரத்தை உபயோகிப்பதில்லை . இவை தவிர அரசியலமைப்பையே மாற்றவோதிருத்தவோ அதிகாரம் படைத்துள்ளது. இவ்வாறு பாராளுமன்றம் இறைமைத் தன்மையைக் கொண்டுள்ளது.

**7. கேபினட் ஆட்சி முறை அரசு:**

இங்கிலாந்தில் கேபினட் முறை அரசு செயல்பட்டு வருகிறது. அரசி பெயரளவுக்குத்தான் நாட்டின் தலைவர். உண்மையான அதிகாரங்கள் காபினட்டிடமே உள்ளது. இந்த கோபினட் உறுப்பினர்கள் பாராளு மன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினர்கள் ஆவார்கள். எனவே பாராளுமன்றத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்ற வழியில்லை. ஆனால் பாராளுமன்றம் அரசாங்கத்தின் கொள்கையை ஏற்கவில்லையென்றால் இந்த கோபினட் அமைச்சர் குழு பதவி விலக வேண்டும். அதாவது பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை மட்டும் தான் அமைச்சரவை பதவியிலிருக்க முடியும்.

8. **பரம்பரை மரபு:**

இங்கிலாந்தில் அரச பதவியும், பாராளுமன்றத்தின் மேல் சபையான பிரபுக்கள் சபையும் பரம்பரையாக இருந்த வருகின்றன. அரச குடும்பத்தினுள் ஒருவர் பாராளுமன்ற ஒப்புதலின் பேரில் முடிசூட்டப் படுகிறார். பிரபுக்கள் சபையின் அங்கத்தினர் பதவி பிரபுக்களின் குடும்ப வாரிசுப்படி வகிக்கப்படும் ஒன்றாகும். இங்கிலாந்தின் வழக்காறு இதற்கு வழிகாட்டுகிறது.

9. **சட்டத்தின் ஆட்சி:**

சட்டத்தின் ஆட்சி என்பது இங்கிலாந்து அரசியலமைப்பின் தனிச்சிறப்பியல்புகளில் ஒன்றாகும். அதாவது சட்டத்தின் முன் யாவரும் சமம்' என்ற அடிப்படையில் இங்கிலாந்தின் அரசியலமைப்பு விளங்குகிறது. நிறம், இனம், மொழி, பதவி பால் வேறுபாடுகள் அங்கு கிடையாது. எல்லோரும் ஒரே

மாதிரியான சட்டம், நீதி மன்றம், தீர்ப்புகள் ஆகியவை நிலைநாட்டப்படுகிறது. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளைப் போன்று அடிப்படை உரிமைகள் இங்கிலாந்தின்

அரசியலமைப்பில் இடம் பெறவில்லை . ஆனால் சட்டத்தின் ஆட்சி' அங்கே நடைமுறையில் இருப்பதால் மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்.

**<u>10. அரசியலமைப்புத் திருத்தங்கள்:</u>**

அரசியலமைப்பைத் திருத்தவதிலும் எளிதான முறை பின்பற்றப் படுகிறது. சாதாரண சட்டங்கள் இயற்றப்படுவதற்குப் பின்பற்றப்படும் வழிமுறைகளே அரசியலமைப்பின் பகுதிகளைத் திருத்தவும் பின்பற்றப் படுகிறது. மேலும் வழக்காறுகளினாலும் நீதி மன்றங்களின் விளக்கங் களினாலும் அரசியலமைப்பைத் திருத்த வாய்ப்பு இருக்கிறது.

**<u>11. தோற்றத்திற்கும் நடைமுறைக்கும் இடையே காணப்படும் வேறுபாடு:</u>**

தோற்றத்தில் இங்கிலாந்து அரசியலமைப்பு முடியாட்சி முறை' போன்று காணப்படுகிறது. ஆனால் நடைமுறையில் அங்கு மக்களாட்சியே நடைபெறுகிறது. அரசன் அல்லது அரசியார் நாட்டின் தலைவராக இருக்கிறார். கொள்கைப்படி முடியரசே எல்லா அதிகாரங்களின் பிறப்பிடம் அமைச்சர்கள் அரசியின் பணியாட்கள். பாராளுமன்றம் இயற்றிய சட்டம் அரசியின் இசைவைப் பெற்ற பிறகே சட்டமாகும். ஆனால் நடைமுறையில் அதிகாரங்கள் எல்லாம். அரசியிடமிருந்து பாராளுமன்றம் வழியாக அமைச்சரவைக்கு மாற்றப்பட்டு விட்டன.

**<u>12. சுதந்திரமான நீதிமன்றம்:</u>**

இங்கிலாந்து அரசியலமைப்பின் அடுத்த முக்கியமான சிறப்பியல்பு, அங்கு நீதித்துறை எவ்விதத் தலையீடுமின்றி சுதந்திரமாகச் செயல்படுவதேயாகும். மக்களின் உரிமைகளையும், சுகம் பாதுகாக்கும் பாதுகாவலனாக நீதிமன்றம் இருக்கிறது இந்த வற்றை ஆட்சி முறையைக் கொண்ட நாடாதலால் அங்கு 'இணைந்த ஒரே சீரான நீதி மன்றங்கள்' உள்ளன.

**<u>13. இருகட்சி ஆட்சி முறை: -</u>**

இங்கிலாந்து இருகட்சி ஆட்சிமுறைக்கு எடுத்துக்காட்டாகக் திகழ்கிறது. இங்கிலாந்தின் வரலாற்றுப்போக்கு, ஓர் உறுப்பினர் கெர் sinale member Constituency) முறை, கட்சிகளின் உளம் கட்டுப்பாடு ஆகியவை இதற்குக் காரணம் ஆகும். இரண்டு கட்சிகளிலேயுமே பற்பல பிரிவினரும் உறுப்பினராக உள்ளனர். தேர்தலில் *பெரும்பான்மை கட்சி ஆளும் கட்சியாகவும் மற்றலை கட்சியாகவும் பணியாற்றும் பாராளுமன்ற அரசாங்கத்தை வெற்றி* செயலாக்குவதில் இங்கிலாந்தின் இருகட்சி முறை மிகச் சாதகமாக இருக்கிறது. இப்போது கன்சர்வேட்டிவ் கட்சியும். தொழிற்கட்சியுமே பிரதான இருபெருங் கட்சிகளாக விளங்குகின்றன.

**<u>14. கலப்பு அரசியலமைப்பு:</u>**

இங்கிலாந்து அரசியலமைப்பு ஒரு கலப்பு அரசியலமைப்பாகும் வகரநாட்டின் தலைவரான அரசியோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாமல் வாரிசு முறைப்படி ஆயுள் காலத்திற்கும் ஆட்சி செய்யும் அரச பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்கிறார். இவர் முடியாட்சித் தத்துவத்தைப் பிரதிபலிக்கிறார்.

பாராளுமன்றத்தின் மேல்சபை பிரபுக்கள் ஆட்சியின் தத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும். கீழ்சபையான மக்கள் சபை ஜனநாயக முறைக்கு எடுத்துக்காட்டாகும். ஆகவே. ஆங்கில அரசியலமைப்பு முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று தன்மைகளும் கலந்த ஒரு அரசியலமைப்பு ஆகும். ஆனாலும் ஜனநாயக முறையே நடைமுறையில் உள்ளது. பொதுத் தேர்தல்கள் மூலம் மக்கள் தங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கிறார்கள்.

# அரசர்

இங்கிலாந்தில் அரசர் பதவி பழமையும் பெருமையும் பெற்று விளங்குகிறது. மக்கள் அரசரை தங்கள் ஒற்றுமையின் அடையாளமாகவும், பண்பாட்டின் சின்னமாகவும் எண்ணி மகிழ்கின்றனர். பழங்காலத்தில் அரசர்களே நிர்வாகத்துறை, சட்டம் இயற்றும் துறை, நீதித்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தார்கள். பாராளுமன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமல் தம் விருப்பப்படி ஆட்சி செய்தனர். மொத்தத்தில் சர்வாதிகாரிகள் போல் நடந்து கொண்டார்கள். ஆனால் பல நூற்றாண்டு களாக அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே ஏற்பட்ட போராட்டத்தின் முடிவில் பாராளுமன்றமே வெற்றி பெற்றது. 1688-ம் வருட்புகழ்பெற்ற புரட்சிக்குப் பின்னர் அரசரின் அதிகாரங்கள் குறைக்கப் பட்டு பெயரளவுக்கு நிர்வாகத்துறை தலைவராக உள்ளார். அதாவது சட்டப்படி இங்கிலாந்தில் அரசரிடமே எல்லா அதிகாரங்களும் உள்ளன. ஆனால் நடை முறையில் அமைச்சர்களிடமே எல்லா அதிகாரங்களும் உள்ளன.

**அரசரின் அந்தஸ்து:**

இங்கிலாந்தில் அரச பதவி மாறாதது. அது இங்கிலாந்தின் அரசியலமைப்பில் பரம்பரையாக உறுதி செய்யப்பட்டதும் மிக முக்கியமானதுமான பதவி ஆகும். 1701-ம் வருட அரசுரிமை நிர்ணயச் சட்டப்படி புரட்டஸ் தாந்து. கிறிஸ்தவ மதத்தைச்சார்ந்தவர்தான் அரசராக முடியும். அவர்கத்தோலிக்க பெண்ணை திருமணம் செய்ய முடியாது. அரசரின் முதற்பிள்ளையே பட்டத்திற்கு வருவார். ஆண்வாரிசு இல்லையென்றால் முதல் பெண்பிள்ளை பட்டத்திற்கு வருவார். அரசருக்குப்பின் ஆண், பெண், வாரிசே இல்லையென்றால் பாராளுமன்றம் வேறு ஒரு அரச குடும்பத்தை நியமித்து அரசுரிமையை அளிக்கும், அரசர் கேன்டர்பரி அதிமேற்றி ராணியரால் (Archbishop of canterbury) முடிசூட்டப்படுவார். தற்போது இங்கிலாந்தின் அரசியாக இருக்கும் இரண்டாம் எலிசபெத் 1952 பிப்ரவரி 6-ம் தேதி முடிசூட்டப்பட்டார். இவரது மகனான சார்லஸ் பட்டத்து இளவரசர் ஆவார், அவர் வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) என்று அழைக்கப்படுகிறார்.

**மகுடமும் மன்னரும்**

இங்கிலாந்து அரசியலமைப்பு முறையில் அரசுக்கும்

அரசருக்கும் உள்ள வேறுபாடு முக்கியமானது ஆகும், அரசு அல்லது மகுடம் என்பது அரசரின் அதிகாரங்களைக் கொண்ட ஒரு அமைப்பைக் குறிக்கிறது. அரசர் என்பது அப்பதவியிலுள்ள தனி மனிதனைக் குறிக்கிறது.ஆகையால் அரசர் இறக்கலாம். ஆனால் அரசு (மகுடம்) நிரந்தரமானது. 'அரசர் இறந்து விட்டார், அரசர் வாழ்க' என்று இங்கிலாந்து மக்கள் கூறுவது இவ்வேறுபாட்டை விளக்குகிறது. அதாவது அரசர் இறந்து விட்டார். அரசர் பதவி மறையவில்லை ' என்பதே இதன் பொருள். 'ஓர் அரசரிடமிருந்து மற்றொரு அரசர்மரபுரிமையாகப் பெற்றுக் கொண்ட அரச பதவி வாழ்க' என்றும் விளக்கமாக சொல்லலாம். அரசரின் ஊதியம் ஆண்டொன்றுக்கு 4,75,000 பவுன்கள் ஆகும் பக்கிங்காம்

அரண்மனையே (Buckingham Palace) அரசரின் குடியிருப்பு ஆகும். இவ்வாறு இங்கிலாந்தில் அரசர் வாழலாம், ஆளாலாம், மாளலாம். ஆனால் மகுடம் அல்லது அரியணை மாறாதது நிலையானது.

**<u>அரசரின் அதிகாரங்கள் :</u>**

1. **அரசரே நிர்வாகத் தலைவர்:**

இங்கிலாந்தில் அரசாங்கத்தின் அலுவல்கள் எல்லாம் அரசரின் பெயரிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளான பிரமத மந்திரி, மற்ற அமைச்சர்கள், நீதிபதிகள், வெளிநாட்டு தூதுவர்கள், திருச்சபை மேற்றிராணியர்கள் ஆகியோரை

நியமனம் செய்வது அரசரே அரசாங்கம் மாண்புமிக்க அரசரின் அரசாங்கம் (His majesty's government) என்று அழைக்கப்படுகிறது. அரசரின் பெயரிலேயே ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

2**<u>. பாராளுமன்ற அதிகாரங்கள் :</u>**

இங்கிலாந்தில் அரசர், பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை ஆகிய மூன்றும் கொண்டதே பாராளுமன்றமாகும். அதாவது அரசரோடு கூடிய (பாராளுமன்றமே (King-in-Parliament) முழுப் பாராளுமன்ற மெனக் கருதப்படுகிறது. பாராளுமன்றத்தைக் கூட்டுதல் ஒத்திவைத்தல், கலைத்தல் போன்ற அதிகாரங்கள் அரசருடையதாகும் ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றக் கூட்டத்தை அரசரே துவக்கிவைத்து உரை நிகழ்த்துவார். இதற்கு அரியணை உரை (Speech from the Throne) என்று பெயர். இந்த அரியணை உரையே அரசாங்கத்தின் முக்கியமான கொள்கைகளை எடுத்துச் சொல்லும்.

**<u>3. நீதித்துறை அதிகாரங்கள் :</u>**

இங்கிலாந்தில் நீதித்துறை சுதந்திரமாக இயங்கி வருகிறது. ஆனாலும் மரபின் காரணமாக அரசரே நீதியின் உறைவிடமாகக் கருதப்படுகிறார். உயர் நீதிபதிகளிலிருந்து சாதாரண அமைதிக் காவல் நடுவர் (Justice of peace) வரை அரசராலயே நியமிக்கப்படுகின்றனர். இது தவிர நீதிமன்றங்களால் வழங்கப்படும் தண்டனையைத் தள்ளி

அதிகாரத்திற்குட்பட்டவை. அரசரின் மேற்பார்வையில் தான் இராணுவத்திற்கு ஆள் எடுத்தல், ராணுவ அமைப்பு, மற்றும் ராவை நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. விட்டு மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரம் அரசருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இது அரசரின் தனிச் சிறப்புரிமையாகக் கருதப்படுகிறது. மன்னர் எந்தத் தவறும் செய்யமாட்டார்' என்ற கொள்கையின்படி நீதிமன்றம் அரசரைக் கட்டுப்படுத்த முடியாது.

**<u>4. இராணுவ அதிகாரங்கள் :</u>**

அரசரே தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைவராவார். போர் தொடுப்பது, சமாதானம் செய்து கொள்ளுதல் ஆகியவை அரசரின் பெயராலேயே செய்யப்படுகின்றன. அயல் நாட்டு இராணுவத் தொடர்புகள் அனைத்தும் அவர் அதிகாரத்திற்குட்பட்டவை. அரசரின் மேற்பார்வையில் தான் இராணுவத்திற்கு ஆள் எடுத்தல், ராணுவ அமைப்பு, மற்றும் ராவை நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

**<u>5. வெளிவிவகார அதிகாரங்கள் :</u>**

வெளிநாட்டு உறவு அனைத்தும் அரசரின் பெயராலேயே நடைபெறுகின்றன. அயல்நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளுவது அரசரே.

வெளிநாடுகளுக்கு நல்லெண்ண பயணங்கள் மேற்கொண்டு பிற நாடுகளுடன் நட்புறவு மனப்பான்மையை வளர்க்கிறார். இங்கிலாந்து வரும் பிற நாட்டு தலைவர்களை வரவேற்பதும் அரசரே.

**6) அரசரே திருச்சபையின் தலைவர்:**

அரசரே இங்கிலாந்தின் திருச்சபையின் (Church of England) தலைவராக இருக்கிறார். பிஷப்புகள், ஆர்ச்பிஷப்புகள் போன்ற சமய உயர் குருமார்க்களை இவரே நியமிக்கிறார். சமயத்தைப்பாதுகாப்பது அரசரின் கடமை. எனவேதான் அரசர் சமயத்தின் பாது காவலர் (Defender of faith) 21 எனப்படுகிறார். திருச்சபை மன்றங்கள் இயற்றும் தீர்மானங்கள் எல்லாம் அரசரின் இசைவு பெற்ற பிறகே செயல்படுத்தப்படும். பொதுவாக, மதசார்பான அனைத்து விஷயங்களிலும் அரசரின் முடிவே இறுதியானது. 7. தலைமை அமைச்சரை நியமித்தல்:20(இங்கிலாந்தின் தலைமை அமைச்சரை நியமிப்பது அரசரின் முக்கியப் பணியாகும். பொதுவாக பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் என்ற மரபு உண்டு. மரபின் அடிப்படையிலேயே தலைமை அமைச்சராக வருபவர் பாராளுமன்றத்தின் கீழ் சபையான மக்கள் சபையைச் (House of Commons) சார்ந்தவராக இருப்பார். பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் அரசரே நிலைமைக்கேற்ப முடிவு செய்வார். அதே போல் தலைமை அமைச்சர் பதவியிலிருக்கும் போது இறந்து விட்டாலோ, அல்லது நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டு விட்டாலோ நிலைமைக்கேற்ப அரசர் தன் முடிவுகளை எடுப்பார்.

**8. அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம்:**

(அரசரின் விருப்பு வெறுப்பு எப்படியிருந்தாலும், அமைச்சர்கள் விருப்பப்படியே அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே மக்களின் கருத்தாகும். ஆனால் அமைச்சரவையின் நடவடிக்கைகள் அனைத்தும்

அரசருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்படும்.

**9. கௌரவிக்கும் அதிகாரம்:**

இங்கிலாந்தில் அரசர் கௌரவத்தின் பிறப்பிடமாகத் திகழ்கிறார். ஒவ்வொரு துறையிலும் சிறப்பான செயல்களைப் பாராட்டி கௌரவிக்கும் அதிகாரம் அரசருக்கு உண்டு. அவர்களுக்கு தலைமை அமைச்சரின் பரிந்துரையின் பேரில் பட்டங்களும், விருந்தும் அளித்து கௌரவிக்கிறார். இந்த பாராட்டுகள் புத்தாண்டு தினம் அல்லது அரசியாரின் பிறந்தநாளன்று அளிக்கப்படுகிறது.

இவைதவிர, துறைமுகங்களைக் கட்டுதல், அறக்கொடைகளை பரிபாலனம் செய்தல், விவிலிய நூல்களை அச்சிடல், புதையல்களுக்குச் சொந்தம் கொண்டாடுதல் ஆகியவை அரசரின் பிற உரிமைகளாகும்.

**10. காமன்வெல்த் நாடுகளின் தலைவர் அரசரே:**

இங்கிலாந்து அரசரே காமன் வெல்த் நாடுகளின் தலைவராக இருக்கிறார். காமன் வெல்த் 53 சுதந்திர நாடுகளைக் கொண்ட அமைப்பாகும். இந்த நாடுகள் ஒரு காலத்தில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளாகும். ஆனால் சுதந்திரமடைந்த பின் இந்த நாடுகளுடன் இணைந்து ஐக்கியமாகவும். நல்லுறவுடனும் தொடர்ந்து இருப்பதற்கு அமைக்கப்பட்ட அமைப்புதான் காமன் வெல்த் ஆகும். வேறுபட்ட இனம், மதம், கலாச்சாரங்களைக் கொண்டு நாடுகளுக் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திவரும் இயக்கமான காமன் வெல்த் அமைப்பிற்கு தலைவராகச் செயல்படும் பெருமை இங்கிலாந்து அரசையே சாரும்.

**காரணங்கள் :**

## 1. இங்கிலாந்து மக்கள் பழைமை விரும்பிகள்:

இங்கிலாந்து மக்கள் இயற்கையாகவே பழமையில் பற்றுள்ளவர்கள். கி.பி. 829லிருந்து தொன்று தொட்டு இருந்த வரும் ஒரு பெருமைமிக்க நிறுவனத்தை மாற்ற அவர்கள் துணியமாட்டார்கள். வரம்பில்லா முடியாட்சியாக ஒரு காலத்தில் விளங்கியது. இன்று அரசியலமைப்பிற்கு உட்பட்ட முடியாட்சியாக காணப்படுகிறது. எனவே அதைக் கலைக்க வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகின்றனர். மேலும் அரச குடும்பத்தின் மீது உள்ள அன்பு, பற்று காரணமாகவும் முடியட்சியை மாற்ற வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை.

**2. அரசர் மீது உள்ள பற்றுதல்:**

அரசியலமைப்பைப் பற்றியோ, அரசியல் கோட்பாடுகளைப் பற்றியோ மக்கள் புரிந்து கொள்வதைவிட அரசியைப்பற்றி மக்கள் அதிகம் புரிந்து கொள்வர் என்பது தெளிவு தற்போது மணி முடிதரித்து, செங்கோல் தாங்கி, அரியணையில் அமர்ந்து புரவிகள் பூட்டிய ரதத்தில் பவனிவரும் அரசி எலிசபெத்தின் கட்டளைகளை மக்களுக்கு மறுக்கத் தோன்றாது. அரசி மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் எழிலுருவாக அரசிய லமைப்பில் ஒளிர்கிறார். எனவே இங்கிலாந்து மக்களிடம் அன்பு வளர்ச்சியும், மதிப்பு உணர்ச்சியும் இருக்கும் வரையில் இங்கிலாந்தில் முடியாட்சி நிலவும்.

**3. பாராளுமன்ற முறை அரசில் பெயரளவு தலைவர் அவசியம் தேவை:**

பாராளுமன்ற ஆட்சி முறை நடைபெறும் நாடுகளில் நாட்டின் தலைமைப் பதவியும், நிர்வாகத் துறையின் தலைமைப் பதவியும் ஒரே நபரிடத்தில் கொடுக்கப்படுவதில்லை . எனவே பெயரளவில் மட்டும் அதிகாரம் செய்யும் தலைவர் ஒருவர் தேவைப்படுகிறார். எனவே அரச பதவியை ஒழித்தால் கூட வேறு ஒரு தலைமைப் பதவியை உருவாக்கியே தீர வேண்டும். வேறு ஒரு தலைமைப் பதவியை உருவாக்குவதைவிட மரபுரிமையாக அரியணை ஏறும் அரசரின் தலைமையின் கீழ் இருப்பதே பெருமை என்று இங்கிலாந்து மக்கள் கருதுகின்றனர்.

**4. அரசரின் முதிர்ந்த அரசியல் அனுபவம்:**

இங்கிலாந்து அரசர் தனது ஆயுள்காலம் முழுவதும் பதவியில் இருப்பதால் நல்ல அரசியல் அனுபவம் பெற்றுத் திகழ்கிறார், விக்டோரியா மகாராணி 63 வருடம் ஆட்சி புரிந்தார். ஐந்தாம் ஜார்ஜ் 23 ஆண்டுகள் அரியணையிலிருந்தார். தற்போதைய அரசி இரண்டாம்

எலிசபத் 1952-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை அரசியாக உள்ளார். இப்படி - காலம் பதவியிலிருந்து அரசர் அல்லது அரசி பழுத்த அரசியல் அனுபவம் பெறுகிறார். எனவே அரசியலில் ஏற்படும் பல விதமான சிக்கல்களைத் தீர்த்து, முதிர்ச்சியும், தெளிந்த அறிவும், பரந்த நோக்கும் கொண்டிருப்பார். அரசியல் நிகழ்ச்சிகளை கட்சிகளுக்கு அப்பாற்பட்ட வர்ந்த நோக்குடன் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட அரசியல் அனுபவம் கொண்ட நாட்டின் தலைவரான அரசரை இழக்க இங்கிலாந்து மக்கள் விரும்பவில்லை.

**5. இங்கிலாந்தின் சமூக அமைப்பின் தலைவராக அரசர் விளங்குகிறார்:**

சமூக அமைப்பின் தலைவராகவும் அரசர் விளங்குகிறார். அரசியலில் ஈடுபடுவது போல் மதம், கலை, பண்பாடு, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளிலும்

அரசகுடும்பத்தினர் ஈடுபடுகின்றனர். இப்படி சமுதாயத்தின் பல துறைகளில் உயர்ந்த தரத்தை ஏற்படுத்தி மக்களை நல்லவழியில் நடத்திச் செல்கிறார்கள். ஒழுக்கம் தானதர்மம் ஆகிய துறைகளில் அரசகுடும்பத்தினரின் செயல்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளன. இவ்வாறு அரசரைத் தங்கள் சமுதாயத்தின் தலைமகனாய் ஏற்றுக் கொள்ளும் ஆங்கிலேயர் அரசபதவியை நீக்குவதற்கு தயங்குவர் என்பது உறுதி.

**6. பராமரிப்புச் செலவு குறைவு:**

அரசாங்கத்தின் மொத்த வரவு செலவு திட்டத்தில் ஒரு சதவீதமே அரசகுடும்பத்திற்குச் செலவிடப்படுகிறது. மேலும் பல நாடுகளில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கும், பராமரிப்புக்கும் பெருந்தொகை செலவு செய்யப்படுவதை நாம் காண்கிறோம். ஒரு வாதத்திற்காக. முடியாட்சியைத் தவிர்த்தால் அரச குடும்பத்தினரின் பராமரிப்புக்கான செலவு குறையும் என எண்ணலாம். செலவு குறையும் என்பதற்காக சிலவற்றைத்தான் துறக்க முடியுமே தவிர மக்கள் தங்கள் உயிருக்கும் மேலாக போற்றும் முடியாட்சியைத் துறக்க ஒரு போதும் துணிய மாட்டார்கள்.

## பிரதம மந்திரி

பாராளுமன்ற ஆட்சி நடைபெறும் நாடுகளில் அமைந்துள்ள கேபினட் சபையில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர் பிரதம மந்திரியே ஆவார். இங்கிலாந்து அரசாங்கத்தில் பிரதம மந்திரியின் பொறுப்பை உணர்ந்தவர்கள், அந்த அரசாங்கத்தை கேபினட் அரசாங்கம் என்று கூறுவதை விட 'பிரதம மந்திரியின் அரசாங்கம்' என்று அழைப்பதே பொருத்தம் என்று கருதுகின்றனர். அந்த அளவுக்கு அதிக அதிகாரங்களும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறார் பிரதமர். அரசருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அடுத்தபடியாக மதிக்கப்படும் பெரிய மக்கள் தலைவர் பிரதம மந்திரியே ஆவார். நாட்டின் வாழ்வை அல்லது தாழ்வை நிர்ணயிக்கிறவர் அவரே. இங்கிலாந்தின் பிரதம மந்திரி அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனாதிபதியை விட அதிக அதிகாரமுடையவர். மக்களாட்சி நடைபெறும் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு அதிக அதிகாரத்தை உடைய ஒரு பதவி கிடையாது.

**பிரதமர் பதவியின் முக்கியத்துவம்:**

இங்கிலாந்தில் பிரதம மந்திரி பதவி வழக்காற்றின் அடிப் படையிலேயே பிறந்து வளர்ந்தாகும்.

**பிரதம மந்திரியின் நியமனம்:**

அரசரே பிரதம மந்திரியை நியமிக்கிறார். பொதுத் தேர்தல் மடிந்தவுடன் மக்கள் சபையில் வெற்றி பெற்று வரும் பெரும்பான்மைக் கட்சித் தலைவரையே பிரதமராக நியமிக்கிறார். எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாவிடில் ஏதேனும் ஒரு கட்சியின் தலைவரை அப்பதவிக்கு நியமிக்கலாம். பொதுவாக பெரும்பான்மைக் கட்சியின் தலைவரை நியமிக்கும் போது அரசர் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிக்கிறார் எனலாம். இங்கிலாந்தில் பொதுத்தேர்தல் என்பது பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாகவே அமைகிறது.மக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரைதான் பிரதமர் பதவியிலிருக்க முடியும். மரபின்படி பிரதமர் மக்கள் சபையின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

**பிரதம மந்திரியின் அதிகாரங்கள்:**

**1. அமைச்சரவை அமைத்தல் :**

அரசரால் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கப்பட்ட பின்னர், அமைச்சரவையின் அமைச்சர்கள் பட்டியலை பிரதமர் அரசரின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கிறார். அரசர் அப்பட்டியலை அப்படியே ஒப்புக் கொள்வார். இவ்வாறு அரசாங்கம் அமைக்கப்படுகிறது. இந்த அமைச்சரவையில் அனுபவமும் திறமையும் நம்பிக்கையும் உடையவர்களை கேபினட் அமைச்சர்களாக நியமிக்கிறார். யாரை அமைச்சராக நியமிப்பது, அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை தனது இஷ்டம் போல் நிர்ணயம் செய்யலாம். அமைச்சரவையை விரிவுபடுத்தவதோ அல்லது குறைப்பதோ பிரதம மந்திரியின் விருப்பமாகும்.

**2. இலாக்கா ஒதுக்கிடும் அதிகாரம்:**

அரசாங்கத்தை அமைத்த பிறகு இலாக்காக்களைப்பங்கீடுவதிலும் பிரதமருக்கு முழு அதிகாரம் உண்டு. அமைச்சர்களின் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ப இலாக்காக்களை அவர்கள் இடத்தில் ஒப்படைக் கிறார்கள். அவர் கொடுக்கும் இலாக்காக்களை எல்லா அமைச்சர்களும் ஏற்றுக் கொண்டு பணியாற்றுவது வழக்காறு ஆயிற்று.

**3. அமைச்சர்களை விலக்கும் பொறுப்பு:**

அமைச்சர்களை நியமிப்பது போன்றே அவர்களை விலக்கவும் பிரதம மந்திரிக்கு முழு அதிகாரம் உண்டு. அதாவது தனது நம்பிக்கைக்கும் கருத்துக்கும் ஏற்ற வகையில் நடக்கத் தவறும் அமைச்சர்களை அவர் பதவியிலிருந்து நீக்குவார். இலாக்காக்களை அமைச்சர்களுக்கிடையே மாற்றிக் கொடுக்கலாம். ஒரு குறிப்பிட்ட அமைச்சரை ராஜினாமா செய்யும்படி கேட்டுக் கொள்ளலாம். இவ்வாறு அமைச்சரவையை மாற்றியமைக்கும் அதிகாரம் பிரதம மந்திரிக்கு உண்டு.

**4. கட்சியின் தலைவர்:**

பிரதம மந்திரியே அவரது கட்சியின் தலைவராகவும் விளங்குகிறார். பொதுத்தேர்தலில் முக்கிய பங்கெடுத்து கட்சிக்கு வெற்றி தேடித் தருகிறார். பிரதமரின் கௌரவமும் கட்சியின் பெயரும் இணைந்துள்ளன. ஏனெனில் பிரதமரின் தகுதியை ஆராய்ந்தே அக்கட்சிக்கு மக்கள் வாக்களிக்கின்றனர். எனவே தலைவரின் செல்வாக்கைப் பொறுத்தே கட்சியின் செல்வாக்கு அமைந்துள்ளது.

**5. கேபினட்டின் தலைவர்:**

பிரதம மந்திரியே கேபினட் தலைவராவார். அவரே கேபினட் கூட்டங்களை கூட்டி அதற்கு அவரே தலைமை தாங்குவார். பிரதமரால் அங்கீகரிக்கப்பட்ட பொருள்களே அக்கூட்டத்தில் விவாதிக்கப்படும். கேபினட் குழுக்களும் அவராலேயே நியமிக்கப்படுகின்றன. வாரத்திற்கு ஒரு முறை கூடும் கேபினட் கூட்டங்களில்தான் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல்வேறு கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. கேபினட் அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது அதனைத் தீர்த்து வைக்கிறார்.

கேபினட்டின் முடிவுகளை பிரதமரே அரசருக்கு முதலில் அறிவிப்பார். அதன் பின்னரே பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நெதமரே கேபினட்டின் முடிவுகளை அறிவிப்பார்.

**6.இலாக்காக்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துதல்:**

அமைச்சரவையை வழி நடத்திச் செல்வதோடு மட்டுமல்லாமல் பல்வேறு

இலாக்காக்களுக்கிடையே தொடர்புகளை உண்டாக்கி அவைகளின் பல்வேறு கொள்கைகளை ஒருமுகப்படுத்துகிறார். எல்லா இலாக்காக்களின் நடவடிக்கைகளுக்கும் இவர் ஓர் மேலாளர் (Manager) போன்று செயல்படுகிறார். தற்காலத்தில் இந்த ஒரு முகப்படுத்தும் பணியை பிரதமர் மட்டுமே செய்ய முடியாத காரணத்தினால் கேபினட்டுக்குள்ளேயே ஒரு 'உட்குழு' (Inner Cabinet) தோன்றி வளர்ந்துள்ளது.

**7.முக்கிய அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் :**

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் படியே நியமிக்கப்படுகின்றனர். சான்சலர் பிரபு பதவிக்கான நபரையும், பிரதம நீதிபதியையும், அப்பீல் நீதிமன்ற நீதிபதிகளையும் இவரே தேர்ந்தெடுக்கிறார். வெளிநாட்டுத் தூதுவர்களையும் இவரே முடிவு செய்கிறார். இவர் எடுக்கும். முடிவுகளையே அரசர் அப்படியே ஏற்று பதவிகளில் அமர்த்துகிறார்.

**8. மக்கள் சபையை கலைக்கும் அதிகாரம்:**

பிரதம மந்திரிக்கு மக்கள் சபையைக் கலைக்கும் அதிகாரம் உண்டு. ஆளும் கட்சியின் பெரும்பான்மை குறைந்த பொழுதும், அவர் பதவியிலிருந்து விலகி வெளியேறும் பொழுதும், அரசருக்கு மக்கள் சபையைக் கலைத்து விடும் படி பரிந்துரை செய்யலாம். இது தவிர, மக்களின் நலன்களைப் பிரதிபலிக்காத மக்கள் சபையை தலைத்துவிட்டு மக்களிடம் மீண்டும் ஆட்சி உரிமை பெறுவற்க்காக சபையைக் கலைக்கும் படி பரிந்துரை செய்யலாம். இதுவரை பிரதமரின் பரிந்துரையை அரசர் மறுத்ததும் இல்லை. தள்ளுபடி செய்ததும் இல்லை. சபையை கலைக்க நேரிடும் என்ற பயத்தைப் பயன்படுத்தி சபையில் ஒழுங்கை நிலை நாட்டுகிறார் பிரதம மந்திரி,

**9.கொள்கையின் பிறப்பிடம்:**

பாரதம மந்திரியே அரசாங்கத்தின் கொள்கையின் பிறப்பிடமாக ள்ளார். இவர் மக்கள் சபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவ இருப்பதால் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் அறிவிக்கிறார். அக்கொள்கைகள் பற்றிய விவாதங்களில் முக்கியமான கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வமாக விடையளிக்கிறார் தேசிய விழாக்களிலும், வைபவங்களிலும் கலந்து கொண்டும். தொலைக்காட்சிகளில் தோன்றியும், நிருபர்களுக்கு பேட்டியளித்தும் கொள்கை விளக்கம் அளித்தும் மக்கள் மனதில் இடம் பெறுகிறார்.

**10. வெளிநாடுகளுடன் தொடர்பு:**

அவ பிரதம மந்திரி வெளிநாட்டு உறவு துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பார். உலக மாநாடுகளில் இங்கிலாந்தின் பிரதி நிதியாகக் கலந்து கொள்கிறார். காமன்வெல்த் பிரதம மந்திரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதும் அவர்கள் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதும் பிரதமரின் உரிமைகளில் அடங்கும்.

இவை தவிர பிரதமரின் விருப்பப்படியே விருதுகள், புகழ், பட்டங்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன. அரசரின் அந்தரங்க ஆலோசகராகவும் விளங்குபவர் பிரதம மந்திரியே!

## Unit-II

## <u>பிரபுக்கள் சபையின் அமைப்பு:</u>

உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்ததும், மிகப்பெரிய சபையுமானது என்ற பெருமை பிரபுக்கள் சபைக்கு உண்டு. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தை ஆண்ட நார்மானிய அரசரான முதலாம் ஹென்றியின் (1100-1135) மாமன்றமே (Magnum Concilium) காலப்போக்கில் வளர்ந்து இன்றைய பிரபுக்கள் சபையாகக் காட்சியளிக்கிறது. தற்போது இச்சபையில் 1172 பிரபுக்கள் உள்ளனர்.

a) பரம்பரை அல்லது மரபுரிமைப் பிரபுக்கள் 791 பேர் உள்ளனர். பல தலைமுறைகளில் பல அரசர்களால் பிரபுக்களாக ஆக்கப்பட்டோரின் வழி வந்தோரே மரபுரிமைப் பிரபுக்கள் ஆவர். தந்தைக்குப் பிறகு தலைமகன் என்ற முறையில் வழிவழியாக பிரபுக்கள் சபையில் இவர்கள் இடம் பெறுகின்றனர்.

b) ஆயுட்காலப் பிரபுக்கள் 334 பேர் உள்ளனர். அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்குவோரின் சேவையை பிரபுக்கள் சபை பெற வேண்டி ஆயுட்கால பிரபுக்களை அரசர் நியமிக்கிறார். 1958-ம் வருட ஆயுட்கால பிரபுக்கள் சட்டப்படி இவர்கள் நியமிக்கப்படலாம். இவர்களது பதவி இவர்களது பிள்ளைகளுக்கு மரபுரிமையாக வராது.

c) சட்டப்பிரபுக்கள் 21 பேர் உள்ளனர். சட்டத்துறையில் புகழும், அறிவும் அனுபவமும் கொண்டிருக்கும் சில சட்டபிரபுக்களாக பிரபுக்கள் சபைக்கு நியமிப்பார். இவர்களும் ஆயுட்கால பிரபுக்களே. ஆனால் இவர்கள் சம்பளம் பெறுவதால் மற்ற உறுப்பினர்களுக்கு இல்லாத பொறுப்பு இவர்களுக்கு உண்டு. மேற்கண்ட மூன்று புக்களும் 'உலகியல் பிரபுக்கள்'

d) ஆன்மீக பிரபுக்கள் (Lords Spiritual) 26 பேர் உள்ளனர். இவர்களில் இங்கிலாந்து திருச்சபையின் (Church of England) பிரதிநிதிகளாக 24 பிஷப்புகளும், கான்டர்பரி, யார்க் நகர்களின் இரண்டு ஆர்ச் பிஷப்புகளும் பிரபுக்கள் சபையில் அமர்கின்றனர். இவர்கள் வகிக்கின்ற பதவியின் அடிப்படையில் பிரபுக்கள் சபையில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### பிரபுக்கள் சபையின் உரிமைகள்:

பிரபுக்கள் சபையில் மூன்று உறுப்பினர்கள் வந்தாலே போதும் கூட்டம் நடைபெறலாம். ஆனால் ஒரு மசோதவை நிறைவேற்ற வேண்டு மென்றால், முப்பது பேர் இருக்க வேண்டும். பிரபுக்கள் சபைக் கூட்டங்களுக்கு சான்சலர் பிரபு (Lord Chanceller) தலைமை வகிப்பார்.

பிரபுக்கள் தங்கள் உரிமைகளைத் தடங்கலின்றிச் செய்ய சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர். சபையின் கூட்டத்திற்கு நாற்பது நாட்கள் முன்பிருந்து நாட்பது நாள்கள் பின்வரை எந்த சிவில் குற்றங்களுக்காகவும் அவர்களைக் கைது செய்ய முடியாது. சபை விவாதங்களில் கலந்து கொண்டுபேச முழு உரிமை உண்டு. ஒவ்வொரு பிரபுவுக்கும் அரசரை நேரடியாக சந்தித்துப் பேச உரிமை உண்டு. இது பிரபுக்களின் சிறப்புரிமையாக கருதப்படுகிறது. இந்த உரிமை பொது மக்கள் சபை உறுப்பினர்களுக்குக் கிடையாது. சபையை யாராவது அவமதித்து விட்டால் அவர்களைத் தண்டிக்கும் உரிமை உண்டு. ஆனால் மக்கள் சபைக்கு பொதுத் தேர்தலில் போட்டியிடவும், தேர்தலில் வாக்களிக்கவும் பிரபுக்களுக்கு உரிமை கிடையாது.

### பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள்:

### 1. சட்டமியற்றும் அதிகாரம்:

a)பாராளுமன்றத்தின் மேல்சபையாக விளங்குவதால்

சட்டமியற்றுவதில் பிரபுக்கள் சபைக்கும் பொறுப்பு உள்ளது. பண மசோதாக்களைப் பொறுத்தவரையில் பிரபுக்கள் சபையினால் கட்டாயமாக

ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்ற நியதி இல்லை. மக்கள் சபையால் ஒப்புக் கொள்ளப்பட்ட பண் மசோதா ஒன்று பிரபுக்கள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள்ளாக ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மாத காலத்திற்குப் பிறக அம்மசோதா அரசருக்கு அனுப்பப்பட்டு அவரது இசைவின் பெயரில்

மாகிவிடும். பண மசோதாவை நிராகரிக்கும் உரிமை பிாபக்கள் சபைக்கு கிடையாது. ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்று நிர்ணயிக்கும் பொறுப்பு மக்கள் சபை சபா நாயகருக்கே உண்டு.

b) மற்ற சாதாரண மசோதாக்கள் எந்த ஒரு சபையிலும் சமர்ப்பிக்கப்படலாம். 1911-ம் வருட சட்டப்படி சாதாரண மசோதாக்களை பிரபுக்கள் சபை இரண்டாண்டு காலத்திற்கு தடுத்து நிறுத்தி காலம் தாழ்த்தலாம். ஆனால் 1949-ல் இயற்றப்பட்ட சட்டப்படி ஒரு சாதாரண மசோதாவை ஓராண்டு காலத்திற்கு மேல் நிறுத்தி வைக்க பிரபுக்கள் சபைக்கு அதிகாரம் கிடையாது. ஒரு வருடம் வரை அது தனது திருத்தத்தையோ அபிப்பிராயத்தையோ வெளிடாமல் இருந்தால் அம்மசோதா ஓராண்டு முடிந்தவுடன் சட்டமாக்கப்படும்.

c) பிரபுக்கள் சபை தனது விவாதங்கள் மூலம் சில கொள்கைகளை அது அரசிற்குச் சிபாரிசு செய்யலாம். பொதுவாக பிரபுக்கள் அனுபவமும் திறமையும் பெற்றிருப்பதால் மக்களின் கருத்தக்களை அவர்கள் பிரதிபலிப்பார்கள். அமைச்சர் அவை மக்கள் சபைக்குக் கட்டுப் பட்டாலும், உண்மையில் பல சந்தர்ப்பங்களில் பிரபுக்கள் சபை மக்கள் சபையை விட சிறந்து விளங்குகிறது.

d) கட்சியின் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்ட தொழிலதிபர்கள் விஞ்ஞானிகள், மேதைகள் போன்றவர்கள் பிரபுக்கள் சபையில் இருப்பதால் அவர்களது வாதங்கள் அரசுக்கும் நாட்டிற்கும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும் மக்களின் விருப்பத்தை அறியும் மசோதாக்களை சட்டமாக்காமல் தடுத்து வைப்பதால் மக்கள் சபையின் தீவீரப்போக்கைத் தடுத்து நிறுத்துகிறது.

**1. நிர்வாக அதிகாரங்கள் :**

a) பிரபுக்கள் அரசிடமிருந்து கொள்கை விளக்கங்கள் கேட்பதற்கும் அரசின் கொள்கைகளை விவாதிப்பதற்கும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

b) சட்டபூர்வமான செயல்களை ஆதரிப்பதும், அதனை மறுப்பு களை நீக்குவதில் முடிவெடுப்பது போன்ற செயல்களில் பிரபுக்கள் மக்கள் சபைக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

பிரபுக்கள் சபை கேபினட்டில் அங்கம் வகிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. உதாரணம்: சான்சலர் பிரபு.

**2. நீதித்துறை அதிகாரங்கள் :**

a) பிரபுக்கள் சபை சில நீதித்துறை அதிகாரங்களைப் பெற்றிருக் கிறது. 31 சட்ட நிபுணர்கள் பிரபுக்களாக அரசரால் நியமிக்கப்படுகிறார்கள். இங்கிலாந்தில் பிரபுக்கள் சபைதான் தலையாய உயர்நீதிமன்றம் அல்லது தலையாய மேல் வழக்கு நீதிமன்றம் ஆகும். (Highest Court of Appeall பிரபுக்கள் சபை முழுவதற்கும் இந்த அதிகாரம் கிடையாது. சான்சலர் பிரபு தலைமை தாங்க 9 சட்ட பிரபுக்கள் தான் மேல் வழக்குகளை விசாரிக்கின்றனர். வேறு எந்த நாட்டிலும் மேல்சபை இத்தகைய நீதி செலுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இந்தமுறை யானது அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்கு முரணாக இருக்கிறது.

b) பிரபுக்கள் சபையின் அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையும் இச்சபையே விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும். பிரபுக்கள் சபையின் அங்கத்தினர்கள் தங்களைப் போன்று சமமதிப்பு உள்ளவர்களாலேயே விசாரிக்கப்படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இது நடைபெறும்.

c) பொதுமக்கள் சபை கொண்டுவரும் துரோக குற்ற ஆய்வை பிரபுக்கள் சபை விசாரிக்கிறது. ஆனால் 1805-ம் வருடத்திற்குப் பிறகு எந்த ஒரு குற்றச்சாட்டும் பிரபுக்கள் சபைக்கு வரவில்லை 1936-க்குப் பிறகு இந்த உரிமையை பிரபுக்கள் சபை இழந்து விட்டது.

பிரபுக்கள் சபை தேவையில்லை : காரணங்கள் : (குறைபாடுகள் )

இங்கிலாந்து அரசியல் நிறுவனங்களில் பிரபுக்கள் சபையே மிகவும் அதிகமாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. 'பிரபுக்கள் சபையை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும் அல்லது அதன் அமைப்பை சீர் திருத்த வேண்டும்.' (The house of Lords should either be ended or mended) என்று பலர் குறை கூறுகின்றனர். அதற்கான காரணங்களைக் காணலாம்.

a) பிரபுக்கள் சபை ஜனநாயக முறைக்கு முரண்பட்டதாக இருக்கிறது. பிரபுக்கள் பரம்பரையாக சபையில் இடம் பெறுகின்றனர். பிரபுக்கள் சபை அவர்களின் பரம்பரை சொத்தாகக்கருதப்படுகிறது. இதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இடம் பெறுவதில்லை. எனவே பிரபுக்கள் சபை மக்களாட்சி முறைக்கு முரணானதாக இருக்கிறது.

b) பிரபுக்கள் சபையிலுள்ளவர்கள் செல்வந்தர்களாக இருப்பதால் அவர்கள் சபையின் நடவடிக்கைகளில் அக்கரை கொள்வதில்லை. மேலும் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே அவர்கள் கலந்து கொள்கிறார்கள். எனவேதான் சபைக் கூட்டம் நடத்த மூன்றுபேர் இருந்தால் போதுமானது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது சபையின் பெருங்குறையாகும்.

## கலந்து கொள்ளும் பிரபுக்களும் யாருடைய நலன்களிலும் அக்கறைகொள்லாமல் தங்களது நலன்களை மட்டுமே கவனிக்கிறார்கள்.

f) பிரபுக்கள் சபை ஒரு பிற்போக்கான சபையாகும். இச் சபை முற்போக்கு கருத்துக்களுக்கு விரோதியாகும். மக்களால் தேர்ந்தெடுக்க படாத சபையாகும். பணம், சொத்து, ஏகபோக வாழ்வு, தனி உரிமை இவைகளைப் பாதுகாக்கும் இடமாகும். பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. மக்களாட்சிக் கருத்துக்களுக்குப் புறம்பானதாகும்.

**பிரபுக்கள் சபை தேவையே : காரணங்கள்: (நன்மைகள் )**

a) பொதுவாக இங்கிலாந்து மக்கள் பழமை விரும்பிகள். எனவேதான் தங்கள் பரம்பரையான நிறுவனங்களை, காலத்திற்கு ஒவ்வாததாக இருந்தாலும், உணர்ச்சி வேகத்தில் அழித்துவிடமாட அதனை சீர்திருத்தவே மக்கள் விரும்புகின்றனர்.

b) மக்களாட்சி உள்ள ஒவ்வொரு நாட்டிலும் இரண்டாவது சபை வண்டும். இந்த அவசியத்தை பிரபுக்கள் சபை பூர்த்தி செய்கிறது.

மக்கள் சபையின் ஏதேச்சதிகாரத்தை தடுத்து நிறுத்த மேல்சபையான பிரபுக்கல் சபை தேவைப்படுகிறது.

c) பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் எந்த ஒரு கட்டு சேர்ந்தவர்களாக இல்லாததால்

பொதுப் பிரச்சனைகளில் கருத்தக்களை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர்.

d) பிரபுக்கள் சபை சாதாரண மசோதாக்களை முதலில் வந்து விவாதித்து இயற்றி மக்கள் சபைக்கு அனுப்பினால் மக்கள் சன அதிக நேரம் செலவிடாமல் அதனை இயற்றிவிடும். இதனால் மக் சபையில் சட்டமியற்றும் பளு குறைக்கப்படுகிறது. சட்டமியற்றுங்க. பிரபுக்கள் சபை நேரடியாகவே பங்கு கொள்கிறது.

e) மசோதாக்களில் பெரும்பாலானவைகள் மக்கள் சபையால் தான் தொடங்கப்படுகின்றன. அம்மசோதா பின்னர் பிரபுக்கள் சபைக்கு வரும் போது அதன் குறைகளை எடுத்துக்கூறி அதற்கு திருத்தங்கள் கொண்டு வருவது பிரபுக்கள் சபையாகும். எனவே பிரபுக்கள் சபை மசோதாக்களை மறுபரிசீலனை செய்யும் சபையாகவும் விளங்குகிறது.

f) மக்கள் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள். இளைஞர்களாகவும் போதிய அரசியல் அனுபவமற்றவர்களாகவும் உள்ளனர். பிரச்சனைகளை பரபரப்புடனும் உணர்ச்சியுடனும் அணுகலாம். ஆனால் பிரபுக்கள் அனுபவ முதிர்ச்சியினால் விவாதங்களை உயர்ந்த முறையில் நடத்துகின்றனர்.

g) மிகவும் சிக்கலான, விவாதத்திற்குரிய மசோதாக்களை மக்கள் சபை இயற்றிய பிறகு அது பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்படுகிறது. பிரபுக்கள் சபை தன்னுடைய எதிர்ப்பைக்காட்டி ஓராண்டு காலத்திற்கு காலதாமதம் செய்ய முடியும். அப்போது அந்த மசோதாக்களைப் பற்றிய மக்களின் எண்ணங்களையும், பாதிக்கப்பட்ட பிரிவினரின் எண்ணங் களையும் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு பிரபுக்கள் சபைதான் பொது மக்களின் கருத்தை அறிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

h) தனியார் மசோதாக்களை இயற்றுவதில் பிரபுக்கள் சபை முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் சபையின் பளுவையும் குறைக்கிறது.

i) பிரபுக்கள் சபையை ஒரு விவாத மன்றம் என்று கூறலாம் மக்களின் தேவைகளை எடுத்துச்சொல்லவும், அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டவும் சாதாரண மசோதாக்களை முதலில் இயற்றவும், நிர்வாகத்துறை பற்றி கேள்விகளை எழுப்பவும் இது ஒரு சிறந்த மேல்சபையாக விளங்குகிறது.

**பொதுமக்கள் சபை:**

**மக்கள் சபையின் அமைப்பு:**

இங்கிலாந்து பொதுமக்கள் சபை 659 உறுப்பினர்களைக் கொண்டது.இங்கிலாந்திலிருந்து 529 பேரும் ஸ்காட்லாந்திலிருந்து 72 பேரும் வேல்ஸிலிருந்தும் 40 பேரும்,வடக்கு அயர்லாந்திலிருந்து 18 பேரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன உறுப்பினரும் 57,000 வாக்காளர்களைக் கெம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 181 அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. மனநோயுற்றோர் குற்றம் சாட்டப்பட்டவர்கள், பிரபுக்கள், நீதிபதிகள் கலை வாக்களிக்க முடியாது. மக்கள் சபையின் பதவிக்காலம் வந்த ஆகும். அரசர் விரும்பினால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகவேசன கலைத்து விடலாம். சபையின் நடவடிக்கைகள் சபையின் களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

சபாநாயகரால் நடத்தப்படுக அவைத்தலைவர் என்ற முறையில் பொது மக்கள் சபைக் கூட்டங்கள் சபாநாயக்கர் தலைமை தாங்கி நடத்துகிறார். பதினான்காம் நூற்றாண்டிலிருந்து சபாநாயகர் பதவி நடைமுறையில் இருந்து வருகிறது.

**சபாநாயகர்**:

**சபாநாயகரின் அதிகாரங்கள்: (பணிகள்)**

1. பொது மக்கள் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி சபையின் நிகழ்ச்சிகளை நடத்தி வைக்கிறார். சபையின் அமைதியையும், தமங்கையும் காத்து கூட்டத்தை நடத்திக் கொடுப்பது சபாநாயகரது முதன்மையான கடமையாகும்.

2. சபையில் குறைந்த அளவு வந்திருக்க வேண்டிய உறுப்பினர்கள் வந்துள்ளனரா என்று எண்ணிப்பார்ப்பதும், தீர்மானங்களை உறுப்பினர்களின் வாக்கெடுப்பிற்கு விட்டு முடிவு அறிவிப்பதும் சபாநாயகரின் கடமையாகும். மேலும் தீர்மானங்கள் மீது கொண்டு வரப்படும் திருத்தங்களில் எவற்றை ஏற்கலாம் எவற்றை மறுக்கலாம் என்று முடிவு செய்வதும், ஒத்திவைப்பு கோரிக்கைகளை அனுமதிப்பது அல்லது மறுப்பதும், கிளைக்கேள்விகள் கேட்பதை அனுமதிப்பதும் சபாநாயகரின் கடமையாகும்.

3. சபை விவாதங்களில் பங்கு கொள்பவர்களைத் தீர்மானிப்பதும் சபாநாயகரின் பணியாகும். விவாதங்கள் சிறந்த முறையில் கண்ணியத் துடனும், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டும் அவர் நடத்துகிறார். சபாநாயகரை ' விவாதங்களின் நாயகர்' (Lord of Debates) என்று அழைக்கலாம். மக்கள் சபையில் சபாநாயகரின் முடிவே இறுதியானது ஆகும். அவரது முடிவை எல்லோரும் ஏற்று பணிய வேண்டும்.

4. ஒழுங்கீனமாகவோ, சபாநாயகரின் ஆணைக்கு பணிய மறுக்கும் உறுப்பினரை தற்காலிகமாக விலக்கி வைக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. சபையை விட்டு வெளியேற மறுக்கும் உறுப்பினரை வெளியேற்ற காவல்துறையின் உதவியையும் நாடலாம். பெருங்குற்றம் புரிந்தோரை பிக்பென்னிலுள்ள (Big Ben) தனிமைச் சிறையில் அடைத்து வைக்கும் அதிகாரம் கூட சபா நாயகருக்கு உண்டு.

5. மசோதாக்களில் எவை பண மசோதாக்கள் என்று சான்று கொடுப்பதும் இயற்றப்பட்ட மசோதாக்களில் கையெழுத்திட்டு மேல் சபைக்கு அனுப்புவதும் சபாநாயகரின் பணியாகும்.

6. மக்கள் சபையின் தனி உரிமைகளில் அரசு தலையிட்டாலோ, அல்லது பாதிக்கும்படி நடந்து கொண்டாலோ, சபாநாயகர் குறுக்கிட்டு சபையின் உரிமைகளைக் காப்பாற்றுகிறார்.

7. உறுப்பினர்களை ஒவ்வொருவராகப்பே சபாநாயகரைச் சேர்ந்தது. முக்கிய மசோதாக்கள் எதிர்க்கட்சியினரும் பேச போதுமான வாய்ப்பதன் முக்கியமாகப் பாராளுமன்றத்தில் சிறுபான்மையில் சபாநாயகரின் கடமையாகும்.

8. சபாநாயகர் சாதாரணமாக பொதுமக்கள் வாக்கெடுப்புகளில் கலந்து கொள்வது இல்லை. ஆனால் சில ஆதரவும் எதிர்ப்பும் சமமான நிலையில் இருக்கும் போதிய வாக்கை' (Casting vote) அளித்து மசோதாவின் விதியை நிர்ணயிக்கிறார்.

9. சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி சபைகள் நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். ஆனால் எதிர்கட்கியினர் ஒத்திவைப்பு பிரேரணை கொண்டு வரும்போது அதை அனுமதிப்பது பற்றி முடிவெடுப்பது சபாநாயகரின்

பணியாகும்.

10. மக்கள் சபையின் பல நிலைக் குழுக்களின் உறுப்பினர்களையும் தலைவர்களையும் சபாநாயகர் நியமிக்கிறார். சில சமயங்களில் அக் குழுக்களுக்குத் தலைமை தாங்குகிறார்.

**பொதுமக்கள் சபையின் அதிகாரங்கள்:**

## 1 சட்டம் இயற்றுதல்:

சட்டங்கள் இயற்றும் பொறுப்பே பொது மக்கள் சபையின் முக்கியமான பணியாகும். பெரும்பாலான மசோதாக்கள் பொது மக்கள் சபையில்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. பணமசோதாக்கள் மக்கள் சபையில்தான் முதலில் ஆரம்பமாகிறது. பொதுமக்கள் சபையால் இயற்றப்பட்ட மசோதா பிரபுக்கள் சபைக்குச் செல்கிறது. பிரபுக்கள் சபை அவற்றைக் காலதாமதம் செய்ய முடியுமே தவிர தடுத்து நிறுத்திவிட முடியாது. அரசரும் எல்லாமசோதாக்களுக்கும் தன் இசைவை அளிப்பதே மரபு. எனவே பொது மக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் அனைத்தும் சட்டமாவது உறுதி.

'சட்டங்களை இயற்றுதல், உறுதி செய்தல், விரிவாக்குதல் கட்டுப்படுத்துதல், நீக்குதல், புதுப்பித்தல், விளக்குதல் ஆகிய அலுவல்களில் பாராளுமன்றம் இறைமையும் வரையிறந்த அதிகாரமும் பெற்றுள்ளது' என்று பிளாக்ஸ்ட ன் (Blackstone) கூறுகிறார்.

ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் அமைச்சரவையைக் கட்டுப்படுத்தி அதைப் பொறுப்புள்ள அரசாங்கமாக இயங்கச் செய்வதும் பொது மக்கள் சபையின் கடமையாகும். அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பொது மக்கள் சபைக்கு மட்டுமே உண்டு. பொதுமக்கள் சபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரைதான் எந்த அமைச்சரவையும் பதவியிலிருக்க முடியும். சபையின் நம்பிக்கையை இழக்கும் அமைச்சரவை தானாகவே பதவி விலகிக் கொள்வது மரபு.

நாட்டின் உண்மையான நிர்வாகத் துறையான அமைச்சரவை பொது மக்கள் சபையால், கண்காணிக்கப்படுகிறது. சபையில் உறுப்பினர்கள் கேள்விகளை கேட்டு மந்திரிகளை அடக்குகிறார்கள்.

பொதுவான விவாதத்தை நடத்தி மக்களின் விருப்பு அதற்கேற்றவாறு ஆலோசனை கூறுகிறது. மக்கள் சபை தீர்மானங்கள் கொண்டு வந்து அரசாங்கத்தைத் திணாக எல்லாவற்றையும் விட நம்பிக்கையில்லாதீர்மானம் நிலையே அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்படும் மசாதாவை அமைச்சரவை பதவி விலக வேண்டும். இவ்வாறு பொது மக்கள் சபை கட்டுப்படுத்துகிறது.

**3. நாட்டின் நிதிநிலையைக் கண்காணித்தல் :**

நாட்டின் நிதிநிலையைக் கண்காணித்தல் பொது மக்கள் சபையின் பொறுப்பாகும். இச்சபையை தேசிய நிதியின் காவலர்' (Guardian of Ne tional Finance) என்று கருதுவது மரபு ஆகும். பணமசோதாக்களை பொதுமக்கள் சபையே தோற்றுவிக்கிறது. அரசாங்கத்திற்குரிய வருவாய் துறைகளையும், செலவுதுறைகளையும் பொது மக்கள் சபையே நிர்ணயிக்கிறது. நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டி வரவு செலவு கணக்குகளை வருடா வருடம் தயார் செய்கிறது. மக்கள் சபையின் அனுமதியின்றி வரி விதித்தல் கூடாது. ஒவ்வொரு இலாக்காக்களுக்கு வேண்டிய நிதியை ஒதுக்குவது மக்கள் சபையின் பொறுப்பேயாகும். அரசாங்கத்துறைகளில் பணம் செலவு செய்யப்படும் முறைகளை திறனாய்வு செய்யும் உரிமை சபைக்கு உண்டு.

அரசாங்க கணக்குகளை பொது கணக்குக் குழு' என்ற (Public accounts committee) என்ற பாராளுமன்றக் குழு தணிக்கை செய்யும். இவ்வாறு நாட்டின் நிதி நிலையைக் கண்காணிக்கிறது.

**4. நீதி செலுத்தும் அதிகாரம்: -**

நிதிமன்றங்களின் தீர்ப்பையும் ரத்து செய்யும் அதிகாரம் மக்கள் சபைக்கு உண்டு. சட்டசபையின் முடிவுகளை எதிர்த்து நீதி மன்றங்களில் வழக்கு தொடர அதிகாரம் கிடையவே கிடையாது. இதனால் நீதி செலுத்தவதில் சபையின் அதிகாரம் வெளியாகிறது.

• மக்களின் குறைகளைத் தெரிவிக்கும் மன்றமாக செயல்படல்:

பொதுமக்கள் சபை மிகப் பழங்காலம் தொட்டே மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் மன்றமாகச் செயல்பட்டு வருகிறது. எவ்வளவோ குறைகள் இருக்கும். *

**சட்டம் இயற்றும் முறை:**

**மசோதாக்களின் வகைகள்:**

**a) பொது மசோதாக்கள் :**

நாட்டு மக்கள் அனைவரின் பொது நலன்கள் சம்பர் மசோதாக்கள் ' பொது மசோதாக்கள்' எனப்படுகிறது மசோதாக்களில் பெரும்பான்மையானவை அரசாங்கத்தால் தயாரி: பட்டு சபையில் அமைச்சர்களால் சமர்ப்பிக்கப்படும். அமைச் சமர்ப்பிக்கும் பொது மசோதாக்கள் அரசாங்க மசோதாக்கள்' என் அமைச்சரவையைச்சாராத தனிப்பட்ட உறுப்பினர் கொண்டுவரும் கொல் மசோதாக்கள் தனி உறுப்பினர் மசோதா என்றும் சொல்லப்படுகிறது கொது மசோதாவுக்கு உதாரணம்: வாக்குரிமைக்கான வயதைக் குறைக்கும் மசோதா.

**b) தனி மசோதாக்கள் :**

தனிப்பட்ட இடத்தையோ, ஆளையோ, நிறுவனத்தையோ, வகுப்பாரையோ பாதிக்கும் மசோதாக்கள் 'தனி மசோதாக்கள்' என்று கூறப்படுகிறது. இந்த மசோதாக்கள் மக்கள் சபை உறுப்பினர்களில் யாராவது ஒருவரால் முன் மொழியப்படலாம். தனி மசோதாக்களை இயற்றுவதற்கு வேறு வழி முறை கையாளப்படுகிறது.

**c) பண மசோதாக்கள் :**

வரிவிதிப்பு, செலவு, கடன், பொதுக்கணக்கு ஆகியவை சம்மந்தப்பட்ட மசோதாக்களை பண மசோதாக்கள் எனப்படுகிறது. எவை எவையெல்லாம் பண மசோதாக்கள்' என்பதை 1911-ம் வருட பாராளுமன்றச் சட்டம் விளக்கி கூறுகிறது. பண மசோதாக்கள் அமைச்சர்களால் மட்டுமே தோற்றுவிக்கப்படலாம். மேலும் இந்த பண மசோதாக்கள் பொது மக்கள் சபையில் மட்டுமே முன்மொழியப் படவேண்டும்.

**1. மசோதாக்களைத் தயாரித்தல்:**

பொதுவாக மசோதாக்கள் சபையில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பாக, ஏறத்தாழ மூன்று மாதங்கள் அதன் பூர்வாங்க ஏற்பாடு

ம.மசோதா ஒன்றைத் தோற்றுவிக்க விரும்பும் அமைச்சா, மசோதாவின் சாராம்சம் பற்றி அமைச்சரவையின் சமமதத்தை சம்மதத்தை பெற

வேண்டும்.

**அரசியல் கட்சிகள் வளர்ந்து வந்த விதம்:**

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் ஏற்பட்ட போராட்டமே அரசியல் கட்சிகள் தோன்ற வழி வகுத்தது. அரசருடைய ஆதரவாளர்கள் தங்களை அரசவைக் கட்சி' (Court Party) என்றும் பாராளுமன்றத்தின் ஆதாரவாளர்கள் தங்களை, 'சாதாரணக் கட்சி' (Country Party) என்றும் அழைத்துக் கொண்டார்கள். இரண்டாம் சார்லஸ் (1660-1685) மன்னர் காலத்தில் வெளிப்படையாகவே முறையே தங்களை டோரி (Tory) கட்சியென்றும், விக் (Whig) கட்சி என்றும் அழைத்துக் கொண்டார்கள்.

**கட்சியின் கொள்கைகள்**:

**1. கன்சர்வேட்டிங் கட்சி :**

இங்கிலாந்தில் மிகவும் பழமை வாய்ந்த கட்சிகளில் இதுவும் ஒன்றாகும். இங்கிலாந்து சமூகத்திலுள்ள மிகவும் பழமையான அமைப்புகளான முடியரசு, ஆளும் வகுப்பினர் சொத்துரிமை, பிரபுக்கள் சபை, ஆங்கிலத் திருச்சபை ஆகியவற்றைக் காப்பதைக் கன்சர்வேட்டிவ் கட்சி தனது கொள்கையாக கருதுகிறது. அரசியாரையும், அரச குடும்பத்தினரையும் கண்டிப்பதை இக்கட்சி விரும்புவதில்லை. பிற நாடுகளில் ஆங்கிலப் பண்பாட்டினன் பயனைப் பரப்புவது, சமுதாயத்தில் முதலாளித்துவ முறையையும், தனியார் சொத்தரிமையையும் பாது காப்பது, தேசிய ஒற்றுமையை வளர்ப்பது ஆகியவையும் இதன் கொள்கைகளில் அடங்கும்.

**கன்சா வேட்டிவ் கட்சியின் அமைப்பு:**

கட்சியின் முக்கியமான நிறுவனங்கள், மத்தியகுழு (Central Council), செயற்குழு (Executive) ஆகியவை ஆகும். நாடெங்கிலும் இருக்கும் தேர்தல் தொகுதிக் கழகங்களின் பிரதிநிதிகளும், மண்டலக் குழுக்களின் பிரதி நிதகளும் மத்திய குழுவின் அங்கத்தினர்கள் ஆவார்கள். மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்கால வேட்பாளர்கள் ஆகியோரும் இடம் பெறுகின்றனர். இக்குழு ஆண்டிற்கு ஒரு முறை கூடி கட்சி காரியங்களை கவனிக்கிறது. செயற்குழுவிலிருந்து வரும் தீர்மானங் களையும், இதர யூனிட் களிலிருந்து வரும் காரியங்களையும் பரிசீலனை செய்து அவற்றில் தேவையானவற்றை கட்சித்தலைவருக்குச் சிபாரிசு செய்து அனுப்பும் ஆண்டிற்கு ஒரு முறை கட்சியின் வருடாந்திர மாநாடு நடக்கும்.

**கட்சியின் தலைவர்:**

கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவியே மிக்க அதிகாரம் படைத்ததாகும். அவருடைய அதிகாரம் அக்கட்சியின் ஆதரவாளர்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பொறுத்தே அமையும். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் பதவியை தொடர்ந்து வகிக்கலாம். அவர் பதவி விலகவும் செய்யலாம். கன்சர்வேட்டிவ் கட்சியின் அமைப்பில் தலைவரே முதன்மையான இடம் வகிக்கிறார். கட்சியின் நிறுவனங்கள் அனைத்தும் தலைவர் சொற்படி நடப்பதே பொதுவான நமக்கம். இக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்று வந்தால் இதன் தலைவரே பிரதம மந்திரியாகிறார். 1979 முதல் 1997 மே வரை 18 ஆண்டுகள் தேர்தலில் இக்கட்சி தோற்றுவிட்டது.

**2. தொழிற் கட்சி :**

தொழிற் கட்சி இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியதே பாகும். இக்கட்சி இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியினால் பிறந்த இயற்கை குழந்தையாகும், முதலாளித்துவத்திற்கு எதிராக எழுந்த ஒரு சமதர்மக்கட்சியாகும். உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அரசுடமை - ஆக்கப்பட வேண்டும். நாட்டில் சமதர்மக் கோட்பாடுகளை படிப் படியாகவும், ஜனநாயக முறைகளையொட்டியும் புகுத்துவது இக்கட்சியின் நோக்கம். வேலை, கூலி, கல்வி, ஓய்வு, வேலையின்மை, நோய், முதுமை ஆகியவைகளிலிருந்து காப்பு போன்ற வற்றை இக்கட்சி வலியுறுத்துகிறது.

தொழிலிலும், உழவிலும் ஈடுபட்டிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களே தொழிற்கட்சியின் முதுகெலும்பாக அதைத் தாங்கி நிற்கின்றனர். நடுத்தர வகுப்பினர், அரசு ஊழியர்களில் இடை நிலையிலும், தாழ்ந்த நிலையிலும் வேலை பார்ப்போர் எழுத்தாளர், நடிகர்கள், கலைஞர்கள் ஆகியோர் இக்கட்சியை ஆதரிக்கின்றனர். படித்தவர்களும் இக்கட்சியில் சேர்ந்துள்ளனர். 'பைபிளின் அடிப்படையிலேயே இவர்கள் தங்கள் சுதந்திரஜனநாயகக் கொள்கைகளை வகுத்துள்ளனர்'. என்று பைனர் (Finer) என்பவர் கூறுகிறார்.

**கட்சியின் அமைப்பு:**

ஒவ்வொரு தேர்தல் தொகுதியும் ஒரு யூனிட்டாக செயல்படுகிறது. தேர்தல் தொகுதிக் கழகங்களும். தொழிற்சங்கங்களும், சமதர்மக் கழகங்களும் சேர்ந்த அமைப்பே தொழிற்கட்சியாகும். தொழிற்கட்சியின் அமைப்பில் வருடாந்தோரும் கூடும் மாநாடே கட்சிக் கொள்கைகளையும், மற்ற செயல்களையும் நிர்ணயிக்கும் நிறுவனமாகக் கருதப்படுகிறது. இந்த மாநாட்டில் மேற்கண்ட மூன்று வகையான பிரிவுகளிலிருந்தும் பிரநிதிகள் கலந்து கொள்வார்கள். இந்த மாநாட்டில் தேர்தல் மூலமாக ‘தேசியக்குழு' (National Council) ' தேசிய நிர்வாகக் கமிட்டி ' (National executive Committee) ஆகிய இரு குழுக்களும் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 1997 மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இக்கட்சி வெற்றியடைந்து இதன் தலைவரான டேனி பிளேயர் இங்கிலாந்தின் பிரதமராகபதவி யேற்றார்

**3. லிபரல் ஜனநாயக் கட்சி :**

முதலாளித்துவத்தை ஆதரிக்கும் கன்சர்வேட்டில் கட்சிக்கும், ஜனநாயக சமதர்மத்தை ஆதரிக்கும் தொழிற்கட்சிக்கும் இடைப்பட்ட நிலையில் லிபரல் கட்சியின் கொள்கைகள் அமைந்திருக் கின்றன. 'அரசைவிட தனிமனிதனே உயர்ந்தவன், தனிமனிதனின் பண்பை வளர்க்க அரசுமுழு ஊக்கம் அளிக்க வேண்டும். நாட்டில் தடையிலா வாணிபம் நிலவவேண்டும். அமைதியான வழிகளைப் பின்பற்றி உலக சமாதனத்தைப் பின்பற்ற வேண்டும். வங்கிகள் போக்குவரத்து சாதனங்கள், மின்சக்தி, நிலக்கிரி போன்ற தொழில்கள் சமுதாய நலன்களுக்காக அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். ஏழை எளியவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும்.' ஆகியவை லிபரல் கட்சியின் கொள்கைகளாகும்.

1. கோட்ட நீதிமன்றங்கள் (Country Courts):

இங்கிலாந்தின் நீதி முறையில் ஒரு ஓழுங்கும், ஓர்மையும் ஏற்பட்டன. கோட்ட நீதி மன்றங்கள் (வட்டார மென்றங்கள்) 1846-ல் தோற்றுவிக்கப்பட்டன.
இங்கிலாந்திலும் வேல்ஸ்

தியிலமாக மொத்தம் நானூற்றி ஐம்பது வட்டார நீதிமன்றங்கள்

செயல்படுகின்றன. இவைகளில் சுமார் அறுபத்தி ரெண்டு நீதிபதிகள் செயல்படுகிறார்கள். மாதம் ஒரு முறை அந்தந்த வட்டாரத்திலுள்ள பெரிய மவர்கள் அல்லது நகரங்களில் விசாரணைகள் நடைபெறும் இதன் நீதிபதிகள் அரசியால் நியமிக்கப்படுகிறார்கள். பொதுவாக சட்டம் பயின்று குறைந்தது ஏழாண்டு காலம் வழக்கறிஞர்களாக பணியாற்றிய அபைவம் உடையவர்களுக்கே இப்பதவி கொடுக்கப்படுகிறது. ஏழைகள் இந்த நீதி மன்றங்களில் இலவச நீதி பெறுவதற்கு 1949-ல் ஏற்பட்ட சட்டம் ஒன்று வழி செய்துள்ளது.

2. நீதித்துறையின் மிக்குயர் நீதிமன்றம் (Supreme Court of Judicature):

வட்டார நீதிமன்றங்கள் நானூறு பவுன் மதிப்புள்ள வழக்குகளையே விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளதால் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகளை விசாரிப்பதற்கு நீதித்துறையின் மிக்குயர் நீதிமன்றம் 1873, 1876-ம் வருடம் இயற்றப்பட்ட தலைமை நீதி மன்றங்களின் சட்டப்படி தோற்றுவிக்கப்பட்டது. இந்த நீதி மன்றத இரு பிரிவுகள் உள்ளன. அவை 1) உயர் நீதி மன்றம் 2) மேல் முறையீட்டு நீதி மன்றம் ஆகியவை ஆகும்.

**1) உயர் நீதி மன்றம் :**

இதுவே மிக்குயர் நீதிமன்றத்தின் முதல் பி அரசருடைய பெஞ்ச் பிரிவு, சான்சரி பிரிவு, புரபேட,வ அட்மிரால்டி பிரிவு ஆகிய பிரிவுகள் உண்டு.

a) அரசி பெஞ்ச் பிரிவு :

இதில் ஒரு நீதிபதியும் பத்தொன்பது . புரிகின்றனர். இந்த நீதி மன்றம் பழைய நீதி நிறுவனம் விண்ணப்ப நீதி மன்றம், கருவூல நீதிமன்றம், திவான் ஆகியவற்றின் பணிகளை அப்படியே மேற்கொண்டது. மே நீதி மன்றங்களிலிருந்து வரும் மேல் வழக்குகளையும் வ. இன்கான் ஸ் வட்டி வியாபாரம், வரவிதிப்ப அவ வமக்குகளையும் விசாரணை செய்யும் தலைமை நீதிபதி பி. தலைமை வகிக்கிறான். b. சான்சரி பிரிவு:வயும் பொருட்சேதம், கியவற்றைப் பற்றிய திபதி பிரபு அதற்கு

சான்சரி பிரிவுக்கு சான்சரி பிரபுவே தலைமை வகிக்கிறார். மேல ஐந்து நீதிபதிகளும் இதில் பணி புரிகின்றனர். தோட்டங்கள் (ES கம்பெனிகள், வங்கிகள், திவாலாவாதல் முதலியவை சம்பந்தப்பட் வழக்குகள் இங்கு விசாரிக்கப்படுகின்றன.

C) இறப்புறுதி சான்று, விவாகரத்து, கடற்படை உயர் நீதி மன்றம் :

இந்தப்பிரிவில் ஒரு தலைமை நீதிபதியும் ஏழு நீதி மன்றம் பணி புரிகின்றனர். மரண சாசனங்களை மீறுதல், விவாகரத்து செய்தல், கடற்படை சம்பந்தமான சிவில் வழக்குகள் ஆகியவற்றை இந்த பிரிவு கவனித்து விசாரித்துத் தீர்ப்பு கூறுகிறது.

**ப) மேல் முறையீட்டு நீதி மன்றம் :**

இது மிக்குயர் நீதி மன்றத்தின் இரண்டாவது பிரிவாக பது மேல வழக்கு நீதிபதிகள் (Lord Justices of Appear புரிகின்றனர். இதில் தலைமை நீதிபதி மாஸ்டர் ஆப் ரோல் Rolls) என்று அழைக்கப்படுகிறார். பொதுச் சட்டம் பற்றிய*து பிரிவாகும். இதில், es of Appeals) Lievoll "ஆப் ரோல்ஸ் (Master of டம் பற்றிய வழக்குகளில்*
மன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

**கிரிமினல் நீதி மன்றங்கள்:**

**1. அமைதிகாண் நீதிமன்றங்கள்:**

இவை மிகச்சிறிய குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்களாகும். அடிதடி, களவு, கொள்ளை முதலியன சம்பந்தப்பட்ட வழக்குகள், ஸ்தல ஸ்தாபனங்களால் ஏற்படுத்தப்படும் சட்டங்களை மீறும் வழக்குகள் பான்றவை இங்கு விசாரிக்கப்படும். இங்கிலாந்திலும் வேல்ஸ் நாட்டிலுமாக சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான நீதி மன்றங்கள் இருக்கின்றன. ஆங்காங்குள்ள அரசியல் கட்சியினரின் செல்வாக்குப்படி, ல் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளைச் சான்சலர் பிரபு சறார். தனித்தனியே சிறிய பெரிய நகர்களில் வழக்குகளை . சட்டப்படிப்பற்ற இந்த நீதிபதிகள் சம்பளம் வாங்காமல் பாகவே பணியாற்றுகிறார்கள். 1949-ம் வருடசட்டப்படி இந்த நீதிபதிகள் எழுபத்தைந்து வயதில் ஓய்வு பெற வேண்டும். நக்கு மேற்படாமல் இவர்கள் சிறைத்தண்டனை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நியமிக்கின்றார். தனித்தனில் விசாரிப்பார்கள். சட்டப்படிப்பற்ற கௌரவ நீதிபதிகளாகவே பணய சட்டப்படி இந்த நீதிபதிகள் எழும் பதினான்கு நாட்களுக்கு மேற்பட விதிக்கலாம்.

**2. சிறுகுற்ற நீதிமன்றங்கள் :**

இரண்டு நீதிபதிகள் சேர்ந்து சற்று பெரிய வழக்கு விசாரிக்கும் நீதி மன்றம் இது. இத்தகைய நீதிபதிகள் சுமார் நான்காய பேர் இங்கிலாந்தில் உள்ளனர். கோட்ட தளகர்த்தரின் சிபாரிசின் போன் சான்சரி பிரபு இவர்களை நியமிக்கிறார். ஐம்பது பவுன் முதல் நூறு பவம் வரை அபராதம் விதிக்கவும். ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கவும் அதிகாரம் உண்டு.

**3. காலாண்டுக்கு ஒரு முறை கூடும் நீதிமன்றங்கள்:**

ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள எல்லா அமைதி காவலர்களும் (Justices of Peace) வருடத்தில் நான்கு முறை ஒன்றுகூடி சற்று பெரிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவார்கள். குறைந்தது மூன்று நீதிபதிகளாவது சேர்ந்து பணியாற்றுவார்கள். கீழ் நீதி மன்றங்களிலிருந்து வரும் அப்பீல் வழக்குகளும் இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும். கொலை, ராஜதுரோகம் போன்ற பெருங்குற்றங்கள் தவிர ஏனைய குற்றங்கள் எல்லாம் இந்த செசன் ஸ் நீதி மன்றத்தில் விசாரிக்கப் படுகின்றன.

**4.அஸைஸ் நீதிமன்றங்கள்:**

மாவட்டங்களின் தலைநகர்களிலும், முக்கிய நகர்களிலும் வருடத்திற்கு மூன்று முறை இந்த நீதிமன்றம் கூடும். இது ஒரு வகை சுழல் நீதிமன்றமாகும். நீதிபதிகள் இடம் விட்டு இடம் சென்று இந்த நீதிமன்றங்களில் பணிபுரிகின்றனர். அஸைஸுகளில் கிரிமினல் குற்றங்களே அதிகமாக விசாரிக்கப்படுகின்றன. கடற்செலவு சம்பந்தப்பட்ட வழக்குகளும் தற்காலத்தில் இந்த நீதிமன்றங்களில் தான் விசாரிக்கப்படுகின்றன. லண்டனுக்கும் அதன் சுற்று வட்டாரத்திற்குமாக 'மத்திய கிரிமினல் நீதிமன்றம்' (Central Criminal Court) என்ற தனி அஸைஸு நீதி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

**5.குற்றமேல் வழக்கு நீதிமன்றம்:**

உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியும், அதிலுள்ள அரசர் பெஞ்ச் பகுதியில் சில நீதிபதிகளும் சேர்ந்து இங்கு பணிபுரிகிறார்கள் இது லண்டன் மாநகரிலேயே இயங்குகிறது. எல்லாக் குற்றப்பதிவு கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் அப்பீல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு கூறுகிறது. இந்த நீதிமன்றத்தின் அனுமதியின்

பேரில்தான் வழக்குகள் பிரபுக்கள் சபைக்கு எடுத்துச் செல்லப்படலாம்.

**அரசியல் அமைப்பின் சிறப்புத்தன்மைகள்:**

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அமெரிக்காவில் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்து மக்கள் குடியேறினார்கள். அதன் விளைவாக அட்லாண்டிக் கடல் பகுதியில் பதிமூன்று குடியேற்றங்கள் ஏற்பட்டன. இந்த பதிமூன்று குடியேற்றங்களும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆனால் இக் குடியேற்றங்கள் தங்கள் உரிமைக்காகப் போராடி இங்கிலாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்று 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்' என்ற பெயரில் சுதந்திர நாடானது அதன் பின் அமெரிக்காவின் பெருந்தலைவர்களான ஜார்ஜ் வாஷிங்டன், ஜெபர்சன், மாடிசன், ஹாமில்டன் ஆகியோர் 1787-ல் பிலடெல்பியாவில் ஒரு மாநாட்டைக் கூட்டி அமெரிக்காவுக்கு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கினர். அந்த அரசியலமைப்பு 1789 மார்ச் 4-ம் தேதி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. புதிய அரசியலமைப்பின் படி 1789 ஏப்ரல் 2-ம் தேதி பிரதிநிதிகள் சபையும், ஏப்ரல் 5-ம் தேதி செனட்சபையும் அமைக்கப்பட்டது. 1789 ஏப்ரல் 30-ல் ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பு உலகிலேயே கூட்டாட்சி அரசியலமைப்புக்கு மிகச்சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

**அரசியலமைப்பின் சிறப்புத் தன்மைகள்:**

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பே எழுதப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் அரசியலமைப்பு ஆகும். இது மக்களாட்சி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதலில் கூட்டாட்சி அரசியலமைப்பாகும். இதை அடிப்படையாக வைத்தே இதற்குப்பின் தோன்றிய குடியாட்சி நாடுகளில் அரசியலமைப்புகள் எழுதப்பட்டுள்ளன. இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் சிதைக்கப்படாமலும், பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லாமலும் இயங்கிவருகிறது அமெரிக்க அரசியலமைப்பு.

**1) எழுதப்பட்ட அரசியலமைப்பு :**

உலகில் இன்று இருக்கும் அரசியலமைப்புகளில் முதன் முதலாக எழுத்துருவம் பெற்ற பெருமை அமெரிக்க அரசியலமைப்பையே சாரும். இது சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. ஏறத்தாழ நாலாயிரம் வார்த்தைகளையும், ஒரு முகப்புரை, ஒன்பது பக்கங்கள் கொண்ட ஏழு விதிகள், இதுவரை ஏற்படுத்திய 26 திருத்தங்களையும் கொண்டு விளங்குகிறது.காங்கிரசின் சட்டங்களும் நீதி மன்றத் தீர்ப்புகளும், வழக்காறுகளும், மரபுகளும் அமெரிக்க அரசியலமைப்பை பெரிதும் வளரச் செய்துள்ளன. இன்றும் வளர்ந்து வருகிறது. கூட்டாட்சியின் சிறப்புத் தன்மைகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டு மக்களின் தேவைகளை திறம்பட நிறைவு செய்து வருகிறது.

**2) நெகிழா அரசியலமைப்பு :**

அமெரிக்க அரசியலமைப்பு நெகிழாத் தன்மையுடையது. காரணம் அதன் அரசியலமைப்பை எளிதில் மாற்ற முடியாது. அதன் அரசியலமைபபைத் திருத்த மிகவும் கடினமான முறை பின்பற்றப் பட்டுள்ளது. இதுவரை 26 திருத்தங்கள் மட்டுமே அரசியலமைப்பில் செய்யப்பட்டுள்ளன.

**3) கூட்டாட்சி அரசியலமைப்பு :**

அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்பான தன்மை அதன் கூட்டாட்சித்தன்மையாகும். உலகில் இன்று இருக்கின்ற கூட்டாட்சிகளில் முதன் முதலாக நிறுவப்பட்டது அமெரிக்கக் கூட்டாட்சியே ஆகும். கூட்டாட்சிக்

கருத்துக்களான அரசியலமைப்பின் மேன்மை, அதிகாரப் பங்கீடு, நீதித்துறையின் சுதந்திரம் ஆகிய அனைத்துப் பண்புகளும் அமெரிக்க அரசியலமைப்பில் காணப்படுகிறது. எனவே மிகப் TNபழமையான கூட்டாட்சி என்ற பெருமையுடன், மிகச்சிறந்த கூட்டாட்சிஎன்ற பெருமையும் அமெரிக்காவுக்கு உண்டு. கொண்டு விளங்குகிறது.காங்கிரசின் சட்டங்களும் நீதி மன்றத் தீர்ப்புகளும், வழக்காறுகளும், மரபுகளும் அமெரிக்க அரசியலமைப்பை பெரிதும் வளரச் செய்துள்ளன. இன்றும் வளர்ந்து வருகிறது. கூட்டாட்சியின் சிறப்புத் தன்மைகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டு மக்களின் தேவைகளை திறம்பட நிறைவு செய்து வருகிறது.

**4) அரசியலமைப்பின் இறைமைத் தன்மை :**

அமெரிக்க அரசியலமைப்பே சகல அதிகாரங்களையும் உடையதாகக் கருதப்படுகிறது அரசியலமைப்புக்குப் பொருந்தாத சட்டங்களை அந்த நாட்டின் சட்ட மன்றங்களோ குடியரசுத் தலைவரோ இயற்ற முடியாது. அப்படியே ஏதாவது ஒரு சட்டம் அரசியலமைப்புக்கு முரணாக இயற்றப்பட்டால் அது செல்லாது என்று தீர்ப்புக் கூறு நீதிமன்றங்களுக்கு முழு உரிமை உண்டு.

**5) மக்களின் இறைமைத்தன்மை :**

அமெரிக்க மக்கள் தங்கள் அரசியலமைப்பை 'மக்களின் அரசியலமைப்பாக' (People's gonstitution) போற்றுகிறார்கள். அரசியலமைப்பின் முகப்புரையில் ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாம், மழுமையான கூட்டரசை அமைக்கவும், நீதியை நிலை நாட்டவும், உள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும், பொது பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யவும், பொது நலத்தை வளர்க்கவும், சுதந்திரத்தின் இன்பங்களை நாமும் நமது சந்ததியினரும் பெறவும் இந்த அரசயலமைப்பை ஐக்கிய நாடுகளுக்கு அமைத்து தருகிறோம் என்று காணப்படுகிறது. இவ்வார் அரசியலமைப்பு மக்களால் அமைக்கப்பட்டது என்று அழுத்தமாகச் கூறுகிறது. அமெரிக்க அரசாங்கத்தை அமெரிக்க குடியரசுதலைவர் ஆபிரகாம் லிங்கன் ‘மக்களின் அரசாங்கம், மக்களால் ஆன அரசாங்கம் மக்களுக்கான' அரசாங்கம்' (government of the people, by the people for the people) என்று அழைத்தார்.

**6) அதிகாரப் பிரிவினை :**

அமெரிக்க அரசியலமைப்பு மாண்ட்ஸ்கியூவின் அதிகாரர் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு மிகத் தெளிவான முறையில் சட்டமியற்றும் அதிகாரங் களை காங்கிரசிடமும், நிர்வாகத்துறை அதிகாரங்களை குடியரசுத் தலைவரிடமும், நீதித்துறை அதிகாரங்களைதலைமை நீதிமன்றத்திடமும் அளித்துள்ளது. அக்காலத்தில் அதிகாரப் பிரிவினைத் தத்துவம் பெரிதும் போற்றப்பட்டது, என்பதற்கு அமெரிக்க அரசியலமைப்பைச் சிறந்த சான்றாகக் கூறலாம் அமெரிக்க அரசியலமைப்பை 'அதிகாரப்பிரிவினை மீதான கட்டுரை' என்று அழைக்கலாம்.

**7) சமநிலைத் தடையீடுகள் :**

அதிகாரப்பிரிவினைக் கொள்கையின் மூலம் மக்களின் உரிமைகள் பறிக்கப்படாமலிருக்கவும், ஒவ்வொரு துறையும் மற்ற துறைகள் மீது அத்துமிறி நடக்காமல் தடை செய்யவும், தடைகளும் சமநிலைகளும் என்ற கொள்கையின் அடிப்படையில் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறைகளுக்கிடையே பல தொடர்பு முறைகளை ஏற்படுத்தியுள்ளனர். உதாரணமாக அமெரிக்க காங்கிரசுக்கு குடியரசுத் தலைவரை குற்ற விசாரணை செய்து அவரை பதவியிலிருந்து விலக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் செய்யும் பதவி நியமனங்கள், உடன்படிக்கைகள் ஆகியவை செனட் சபையால் கட்டுப்படுத்தப் படுகின்றன.காங்கிரஸ் இயற்றும் சட்டங்களை ஒப்புக்

கொள்ளாமல் குடியரசுத் தலைவர் தடை செய்ய முடியும். குடியரசுத்தலைவரும் காங்கிரசும் சேர்ந்து நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரங்களைப் பெற்றிருப்பது மூலம் நீதித்துறையைக் கட்டுப்படுத்துகின்றனர். ஆனால் நீதிமன்றமோ, 'காங்கிரஸால் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டங்களை அரசியலமைப்பிற்கு முரணானது என்று கூறி தள்ளுபடி செய்யும் நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

**8) சட்டத்தின் ஆட்சி :**

சட்டத்தின் முன் யாவரும் சமம். சட்டத்தை மீறியதற்கேயல்லாமல் எந்தக் காரணத்திற்காகவும் அரசு யாவரையும் தண்டிக்கக்கூடாது. லோருக்கும் ஒரே விதமான சட்டம் என்ற முறையில் மக்களின் அப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

**9) நீதிப்புனராய்வு:**

நீதிப்புனராய்வு முறை அமெரிக்க அரசியலமைப்பின் சிறந்த காங்கிரஸ் மற்றும் மாநில சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு முரணானவைகளால் இருந்தால் அவைகளை ஆராய்ந்து செல்லாது என்று சொல்வதற்கு அமெரிக்க உயர்நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. இதுவே நீதிப்புனராய்வு என்று சொல்லப்படுகிறது, இதன் மூலம் அரசியல் அமைப்பு சிதையாமல் பார்த்துக் கொள்கிறது நீதிமன்றம். இதனால் அரசியலமைப்பு வளர்ச்சியடைகிறது.

**10) அடிப்படை உரிமைகள் :**

தற்கால அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகளைப் பற்றி முதன் முதலாக விவாதித்தது அமெரிக்க அரசியலமைப்பேயாகும். 1789-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்படவில்லை. எனவே இந்த அரசியலமைப்பு செயல்பட ஆரம்பித்தவுடன் மக்கள் உரிமைகளை கோரி போராட ஆரம்பித்தனர். அதன் விளைவாக 1781-ல் பத்து அரசியல் திருத்தங்கள் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**குடியரசுத்தலைவர்:**

**குடியரசு தலைவராவதற்குரிய தகுதிகள்:**

அமெரிக்க குடியரசு தலைவர் பதவிக்கு போட்டியிட விரும்பு கிறவர் அமெரிக்காவின் இயற்கை குடிமகனாக (NATURAL BORN CITIZEN) இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவராகவும் பதினான்கு ஆண்டுகளாவது அமெரிக்காவில் தொடர்ந்து குடியிருந்தவராகவும் இருக்க வேண்டும்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் :**

**1. நிர்வாக அதிகாரங்கள் :**

a) குடியரசுத் தலைவர்தான் நாட்டின் தலைமை நிர்வாகி' (Cheif executive) யாகவும் உண்மையான நிர்வாகத்துறையின் தலைவரும் ஆவார் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் அரசியலமைப்பும், சட்டங்களும், நீதிமன்றத் தீர்ப்புகளும் நாடு முழுவதும் நிறைவேற்றப்படுகின்றனவா என்று கண்காணிப்பது அவரது கடமை யாகும். சட்டத்தின் ஆணைகளை யாரும் ஏற்க மறுத்தால் அவர்களை அடக்க படைபலத்தைக் கூட பயன்படுத்தலாம்.

b) நிர்வாகத்தின் பல துறைகளின் அதிகாரிகளை குடியரசு தலைவரே நியமிக்கிறார். நிர்வாக அதிகாரிகள், அமைச்சர்கள், வெளிநாட்டுத்தூதுவர்கள், நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகள் குடியரசு தலைவராலேயே

நியமிக்கப்படுகின்றனர். ஆனால் குடியரசு தலைவரால் செய்யப்படும் எல்லா நியமனங்களும் செனட் சபையின் இசைவைப் பெற்ற பிறகே செல்லுபடியாகும். பொதுவாக செனட் அந்த நியமனங்களை மறுப்பதில்லை என்றாலும் மறுக்கும் அதிகாரம் அதற்கும் உண்டு. குடியரசு தலைவர் மாநிலங்களில் அதிகாரிகளை நியமிக்கும் போது அந்த நியமனங்களுக்கு குறிப்பிட்ட மாநிலத்திலிருந்து செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களின் இணக்கத்தை முன் கூட்டியே பெற வேண்டும் என்று செனட் சபை எதிர்பார்க்கிறது. இந்தமுறையைத்தான் அமெரிக்காவில் 'செனட்டர்களுக்கு காட்டும் மரியாதை' அல்லது 'செனட்டின் இணக்கப்பண்பு' (Senetorial cour| tesy) என்று அழைக்கின்றனர்.

குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் அதிகாரிகளில் நதிபதிகளைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம். இதற்கு செனட்டின் இசைவு தேவையில்லை

**2. அயல்நாட்டு தொடர்பு அதிகாரங்கள் :**

a) அயல்நாட்டு தொடர்பு சம்பந்தப்பட்ட அரசாங்கக் கொள்கைகளையும் குடியரசுத் தலைவரே வகுக்கிறார். அவரே அயல்நாட்டுக் கொள்கையின் சிற்பியாகக் கருதப்படுகிறார். அமெரிக்க குடியரசுத்தலைவர்களான வாஷிங்டனின் 'நடுநைநிமக் கொள்கை மன்றோவின் 'தலையிடாக் கொள்கை' வில்சனின் பதினான்கு அம்சத்திட்டம்' ட்ருமனின் கம்யூனிச எதிர்ப்புக் கொள்கை ஆகிய கொள்கைகள் சிறந்த உதாரணமாகும்.

b) வெளிநாட்டுக்குச் செல்லும் தூதுவர்களை செனட்சபையின் இசைவுடன் நியமிக்கிறார். வெளிநாடுகளிலிருந்து வரும் தூதுவர்களை வரவேற்பதும் இவரே. அயல்நாடுகளில் இயங்கும் அரசாங்கங்களை அங்கீகரிப்பதும் குடியரசு தலைவரின் உரிமையாகும்.

c) உலக நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் அதிகாரமும் குடியரசு தலைவருக்கு உண்டு. ஆனால் செனட் சபையின் மூன்றில் இரண்ட பங்கு பெரும்பான்மையால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகே அது செல்லுபடியாகும்.

**3. இராணுவ அதிகாரங்கள்:**

(a) அமெரிக்க படைத்துறையின் தலைமைத் தளபதி (commanderin-chief) குடியரசுத் தலைவரே ஆவார். நாட்டைக்காக்க வேண்டிய பொறுப்பு அவரது சிறப்பான பொறுப்பாக கருதப்படுகிறது. முப்படைகளுக்கும் தேவையான அதிகாரிகளையும் செனட் சபையின் ஒப்புதலுடன் இவரே நியமிக்கிறார்.

b) போர்ட் பிரகடனம் செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு இல்லையென்றாலும் காங்கிரசை போர்பிரகடனம் செய்ய குடியரசுத்தலைவர் நிர்பந்திக்கலாம், போர்க்காலங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் அதிகமாகின்றன. இராணுவத்திற்கு கட்டாயமாக ஆட்களைச் சேர்த்தல், செய்தி தடை, விலை நிர்ணயம், போக்குவரத்து கட்டுப்பாடு ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பகளை வெளிநாட்டுக்கு அனுப்புவது குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திவைப்பது ஆகிய அதிகாரங்களையும் பெற்றுள்ளார்.

c) உள்நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட படைகளைப் ன்படுத்தக் கூடிய உரிமை குடியரசுத் தலைவருக்கு உண்டு. உள்நாட்டுக் வரங்களை அடக்கவும், மாநில அரசாங்கங்கள் இயங்க ஏற்படும் இடையூறுகளை போக்கவும் படையை

பயன்படுத்தலாம்.

**4. சட்டத்துறை அதிகாரங்கள்:**

அமெரிக்க, குடியரசுத் தலைவர் காங்கிரசின் உறுப்பினர் அல்ல. எனவே காங்கிரசுக்கு அவர் பொறுப்பு வாய்ந்தவர் அல்ல. காங்கிரசின் கூட்டங்களில் கலந்து கொண்டு அதன் நடவடிக்கைகளில் அவர் பங்கு கொள்வதும் கிடையாது. பிரதி நிதிகள் சபையைக் கலைக்கவோ, கட்டுப்படுத்தவோ அவருக்கு அதிகாரம் கிடையாது. இருப்பினும் சட்டம் இயற்றும் துறையில் குடியரசுத் தலைவருக்கு முக்கிய பங்கு உண்டு. குடியரசுத் தலைவரே பிரதான சட்டம் இயற்றுனர்' (Chief Legislator) என்ற அழைக்கப்படுகிறார்.

a) காங்கிரசை கூட்டுகிற அதிகாரமோ கலைக்கிற அதிகாரமோ குடியரசுத் தலைவருக்கு இல்லை . ஆனால் சிறப்புக் கூட்டங்களை (Extra ordinary sessions) கூட்டும் அதிகாரம் அவருக்கு உண்டு . அவ்வப்போது நாட்டின் நிலைமையைப் பற்றி காங்கிரசுக்கு செய்தி அனுப்புவார். தனது உரையை நேரடியாகப் போய்க்கூட காங்கிரசில் நிகழ்த்தலாம்.

b) காங்கிரசின் இரு சபைகளாலும் இயற்றப்படும் மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாக முடியும். பெரும்பாலான மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவரின் இசைவு மறுக்கப்படுவதில்லை. ஆனால் காங்கிரசால் நிறைவேற்றப்பட்ட மகோதாவை தனது 'மறுப்பாணை' (Veto power) மூலம் ஏற்க மறுக்கலாம். குடியரசுத் தலைவரின் இந்த 'மறுப்பாணை அதிகாரம்' முக்கியமான தாகும். மறுப்பாணை மூலம் மசோதாவை ஏற்க மறுத்தால் அம்மசோ தாவை பத்து நாட்களுக்குள் அவர் மீண்டும் காங்கிரசுக்கு அனுப்ப வேண்டும். காங்கிரஸ் மீண்டும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுமாயின் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். நடைமுறையில் தலைவர் மறுத்து விட்ட மசோதாவுக்கு மீண்டும் பெரும்பான்மை கிடைப்பதில்லை.

c) அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு 'பையுரை அதிகாரம் (Pocket vote) என்ற சிறப்பதிகாரமும் உண்டு. காங்கிரசால் இயற்றப்பட்ட மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு வருகின்றபோது அதற்க அவர் கையெழுத்திடாது பத்து நாட்கள் வரை காலம் கடத்தலாம். இந்த பத்து நாட்களுக்குள் காங்கிரசின் கூட்டத் தொடர் முடிவடைந்து விட்டால், அல்லது ஒத்திவைக்கப்பட்டு விட்டால் மசோதா சட்டமாகாது.

**5. நீதித்துறை அதிகாரங்கள் :**

நீதி மன்றங்களால் தண்டிக்கப்படும் குற்றவாளிகளுக்கு கருணை காட்டி அவர்களுக்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. தண்டனையை முழுவதுமோ அல்லது ஓரளவு மட்டுமோ தள்ளுபடி செய்யலாம். தண்டனை நிறைவேற்றப்படுவதை தள்ளிப்போடலாம். உள்நாட்டுப்போர், கலகம் போன்றவைகளில் ஈடுபட்ட குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளுக்கு 'பொது மன்னிப்பு வழங்கும்' அதிகாரமும் அவருக்கு உண்டு.

**துணை குடியரசு தலைவரின் அலுவல்கள்:**

a) குடியரசுத் தலைவர் குற்ற விசாரணை மூலம் பதவி நீக்கப் பட்டாலோ, பதவி விலகினாலோ, இறந்து விட்டலோ குடியரசுத் துணைத்தலைவரே அவருடைய பதவியை ஏற்று நடத்த வேண்டும். குடியரசுத் தலைவரின் எஞ்சியுள்ள பதவிக்காலம் முழுவதும் அப்பதவியில் நீடிப்பார். எடுத்துக்காட்டாக 1960-ல் - குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாண் கென்னடி 1963-ல் கொல்லப்பட்டார். துணைக் குடியரசுத் தலைவராக இருந்த ஜாண்சன் 1963-64-ல் தலைவர் பதவியை வகித்தார். அவ்வாறு இதுவரை 7 துணைக் குடியரசுத்

தலைவர்கள் குடியரசு தலைவர் பதவியேற்றிருக்கிறார்கள்.

b) ஆனால் தலைவர் பதவி எப்போது காலியாகும் என்று காத்திருக்க வேண்டியதில்லை! அவருக்கு மற்றொரு முக்கியமான பணி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. துணைக் குடியரசுத் தலைவரே காங்கிரசின் மேல்சபையான செனட் சபையின் தலைவராகப் பணியாற்றுகிறார். ஆனால் அவர் செனட் சபையின் உறுப்பினர் அல்ல. செனட்டின் கூட்டத் தொடர்களை நடுநிலையோடு அவர் நடத்த வேண்டும்.

**பிரதிநிதிகள் சபை அமைப்பு:**

**தகுதிகள் :**

பிரதிநிதிகள் சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 25 வயதுக்கு குறையாமலும் அமெரிக்க குடிமகனாக ஏழு ஆண்டுகள் வாழ்ந்தவராகவும் இருக்க வேண்டும். எந்த மாநிலத்திலிருந்து தேர்தெடுக்கப்படுகிறாரோ அந்த மாநிலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். வழக்காற்றுப்படி அவர் தான் போட்டியிடும் தொகுதியில் வாழ்பவராக இருக்க வேண்டும் அமெரிக்க அரசாங்கத்தில் பதவி வகிக்கும் அதிகாரிகள் காங்கிரசின் இருமன்றங்களுக்கும் போட்டியிட முடியாது,

**உரிமைகள்:**

காங்கிரஸ் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 22.500 டாலர் ஊதியமும், பயணச்செலவு போன்றவைகளுக்காக ஒரு சிறிய

தொகையும் ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது. காங்கிரஸ் கூட்டங்களில் பங்கு பெறும் போதும், அவற்றிற்கும் போகும் போதும் வரும் போதும் உறுப்பினர்களைச் சிவில் குற்றங்களுக்காக கைது செய்ய முடியாது. சபையில் அவர்கள் பேசும் பேச்சு எத்தன்மையதாக இருப்பினும், அதற்காக நீதிமன்றங்களுக்கு சமாதானம் சொல்ல கடமைப்பட்டவர்கள் அல்ல. காங்கிரசின் கூட்டங்களைப் பொது மக்கள் பார்க்க அனுமதிக்கப் படுவார்கள் ரகசியக் கூட்டங்களையும் நடத்தலாம். சபையில் பாதிப் பேராவது வந்திருந்தால் தான் கூட்டத்தைத் தொடங்கமுடியும்.

**சபாநாயகர் :**

தேர்தலுக்குப் பிறகு பிரதிநிதிகள் சபை கூடுகின்ற பொழுது உறுப்பினர்கள் தங்கள் 'சபாநாயகரை' தேர்ந்தெடுக்கிறார்கள். பொதுவாக பெரும்பான்மைக்கட்சியைச் சேர்ந்தவர்தான் சபாநாயகராகத் தேர்ந் தெடுக்கப்படுகிறார். எனவே அவர் கட்சிப் பற்றுடன் தனது பணியை செய்கிறார். சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டு பேசுகிறார். மேலும் சபையின் மற்ற உறுப்பினர்களைப்போலவே மசோதாக்களின் மீது வாக்களிக்கும் உரிமை அவருக்கு உண்டு.

சபாநாயகர் சபையின் ஒழுங்கையும் கண்ணியத்தையும் காக்கிறார். உறுப்பினர்களைப் பேச அனுமதிப்பது, மசோதாக்கள் தீர்மானங்கள் போன்ற வற்றை வாக்களிப்புக்கு வீட்டு அவைவென்றதா தோற்றதா என்று முடிவு செய்வது, சில சிறப்புக் குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பது, மசோதாக்களைக் குழுக்களின் பரிசீலனைக்கு அனுப்புவது ஆகியவை சபாநாயகரின் பணிகளாகும். ஆனால் அவர் எந்த சபை உறுப்பினரையும் கண்டிக்கவோ, தண்டிக்கவோ முடியாது. இந்த உரிமை சபைக்கு மட்டுமே உண்டு.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் தனது கட்சியின் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன் படுத்துகிறார். ஒவ்வொரு தேர்தலிலும் இவருக்கு

எதிராக வேட்பாளர்கள் நிறுத்தப்படுகிறார்கள். ஏதாவது ஒரு சூழ்நிலையில் அமெரிக்க குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர் பதவிகள் ஒரே நேரத்தில் காலியானால் சபாநாயகர் தனது பதவியைத் துறந்து குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வார். இந்த சந்தர்ப்பம் இதுவரை எந்த சபாநாயகருக்கும் கிடைக்கவில்லை !

அமெரிக்க சபாநாயகருக்கும், இங்கிலாந்து சபாநாயகருக்கும் - இடையே உள்ள வேறுபாடுகள்:

1.இங்கிலாந்தின் சபாநாயகர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் படுகிறார். ஆனால் அமெரிக்க சபாநாயகர் போட்டியிட்டே - தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

2.பொதுத் தேர்தலில் இங்கிலாந்து சபாநாயகர் எதிர்க்கப் படுகிறார்.

3.இங்கிலாந்து சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் கட்சி சார்பற்றவராக நடு நிலை வகித்து தனது பணிகளை நிறைவேற்றுகிறார். ஆனால் அமெரிக்க சபாநாயகர்கட்சியின் தலைவராக இருப்பதுடன். தனது கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறார்.

4.இங்கிலாந்து சபாநாயகர் அவர் விரும்புகின்றவரை எத்தனை முறை வேண்டுமானாலும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர் தொடர்ந்து தன் பதவியை வகிக்கலாம். ஆனால் அமெரிக்க சபாநாயகர் பெரும்பான்மைக் கட்சியின் ஆதரவிலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார் ஆட்சி மாறினால் சபாநாயகரும் மாறிவிடுவார்.

5.இங்கிலாந்து சபாநாயகர், சபையின் நடவடிக்கைகளிலும் விவாதங்களிலும் பங்குபெற மாட்டார். ஆனால் அமெரிக்க சபாநாயகர் சபை நடவடிக்கைளிலும் விவாதங்களிலும் பங்கு பெறுகிறார்.

16/இங்கிலாந்து சபா நாயகருக்கு சபையில் வாக்களிக்கும் உரிமை கிடையாது. வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டால் மட்டுமே தனது 'முடிவு வாக்கை' (casting vote) அளிப்பார். ஆனால் அமெரிக்க சபாநாயகர் மற்ற உறுப்பினர்களைப் போன்றே தானும் எல்லா வாக்கெடுப்பிலும் பங்கு கொள்வார்.

7.இங்கிலாந்து சபாநாயகரின் தீர்ப்பே இறுதியானது. சபையில் இருக்கும் பல கட்சி உறுப்பினர்களும் அவரது தீர்ப்பை ஏற்றுக் கொண்டு பணிந்து நடக்க வேண்டும். ஆனால் அமெரிக்க சபாநாயகரின் முடிவுகளை பிரதிநிதிகள் சபை மாற்ற முடியும்.

8.ஒழுங்கீனமாகவும் சபை உரிமைகளை மீறி நடக்கும் 0 உறுபினர்களைத் தண்டிக்கும் அதிகாரம் இங்கிலாந்து சபாநாயகருக்குக் கிடையாது.

9.அமெரிக்க குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவா ஆகிய இரு பதவிகளும் ஒரே நேரத்தில் காலியானால் அமெரிக்க

சபாநாயகர் தம் பதவியை விட்டுவிட்டு குடியரசுத் தலைவர் பதவியை ஏற்பார். ஆனால் இங்கிலாந்து சபாநாயகருக்கு இத்தகைய அதிகாரம் கிடையாது. பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்கள் :

1.சட்டம் இயற்றுதலே காங்கிரசின் முதன்மையாக கடமையாகும் சட்டம் இயற்றுவதில் பிரதிநிதிகள் சபை மேல் சபையான செனட்டுடன் சம உரிமை பெற்றுள்ளது ஆனால் பணமசோதாக்கள் இம்மன்றத்தில்தான் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆனால் பணமசோதாக்களை ஏற்கவோ மறுக்கவோதிருத்தவோ செனட்டுக்கு அதிகாரம் உண்டு.

2. அரசியலமைப்புத் திருத்தம் புதிய மாநிலங்களைச் சேர்த்தல் போன்றவைகளில் செனட்சபையுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

3. குடியரசுத் தலைவர், துணைக் குடியரசு தலைவர் அல்லது உயர் மட்ட அரசு ஊழியர்கள் மீது துரோக குற்ற விசாரணையை பிரதிநிதிகள் சபையே ஆரம்பித்து வைக்கிறது. செனட் அதனை நடத்துகிறது.

4. பல்வேறு வகையான ஆய்வுக் குழுக்களை இம்மன்றமே நியமிக்கிறது.

5. குடியரசுத்தலைவர் தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் கால பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் மிகவும் அதிகமான வாக்குகளைப் பெற்ற மூன்று வேட்பாளர்களில் ஒருவரைச்சபையே கூடித் தேர்ந்தெடுக்கும் இந்த அரியதொரு நிகழ்ச்சி 1824-ம் ஆண்டு குடியரசு தலைவர் தேர்தலில் மட்டும் தான் நிகழ்ந்துள்ளது. அந்தத் தேர்தலில் போட்டியிட்ட நான்கு பேர்களில் யாரும் பெரும்பான்மை வாக்குகள் பெறவில்லை , எனவே பிரதிநிதிகள் சபை இரண்டாவதாக வந்த ஜாண் குவின்சி ஆடம்ஸ் என்பவரை குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

6. பிரதிநிதிகள் சபை செனட்டுடன் சேர்ந்து கொண்டு போர் பிரகடனம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது.

7.. இச்சபை தனது உறுப்பினர்களின் தேர்தல்கள், செலவு கணக்குகள், தகுதிகள் போன்றவைகளில் தீர்ப்பை வழங்கும் உரிமை பெற்றுள்ளது.

**பிரதிநிதிகள் சபையின் பலவீனத்திற்கான காரணங்கள்:**

1.நிர்வாகத்துறைக்கும் பிரதிநிதிகள் சபைக்கும் அதிக இடைவெளி இருப்பதால்தான் அது மேல்சபையான செனட் மீது அதிகாரம் செலுத்து முடியாமலும், பலகீனமாகவும் உள்ளது.

2.இங்கிலாந்து பொதுமக்கள் சபையைப்போன்று, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரி கிடையாது.

3.பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளே யாகும். இது மிகவும் குறுகியகால அளவாகும். உறுப்பினர்கள் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும், மன்ற நடவடிக்கை களிலும் அதிகமாக அக்கரை காட்டுவதில்லை.

4.சட்டமியற்றுவதில் பிரதி நிதிகள் சபை உயர்வாகக் கருதப்படவில்லை. காரணம் சட்டமியற்றுதல், நிதி சம்மந்தமானவை களில் மேல் சபையான செனட்டும் சம அதிகாரம் பெற்றுள்ளது.

5.அரசியலமைப்பின் படி மேல்சபையான செனட் சபை அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளது. துரோகக் குற்ற விசாரணையையும் செனட்சபையே நடத்த முடியும். பிரதிநிதிகள் சபைக்கு விசாரிக்கும் அதிகாரம் கிடையாது.

6.பிரதிநிதிகள் சபையிலுள்ள உறுப்பினர்கள் தங்களது தொகுதி மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும். மீண்டும் தாங்கள்தேர்ந்தடுக்கப்படுவதற்காகவும் ஏதேனும் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் சில நேரங்களில் அத்தீர்மானங்களை தலைமை நீதிமன்றம் தனது நீதிப்புனராய்வு அதிகாரத்தின் படி நிராகரித்து விடலாம். இதனால் மன்றத்தின் வலிமையின்மை வெளியிடப்படுகிறது.

7. பிரதிநிதிகள் சபை அதிக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையாகும். மேலும் உறுப்பினர்கள் அனுபவமற்றவர்களாகவே இருப்பார்கள்.

8. பிரதி நிதிகள் சபை பெரிய சபையாகையால், இங்கு உறுப்பினர்களின் பேச்சுக்களும் விவாதங்களும் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே உறுப்பினர்கள் தங்கள் வாதத்திறமையை வெளிப்படுத்த முடிவதில்லை .

9, பிரதிநிதிகள் சபையைப் போலவே, மேல்சபையான செனட் சபை

உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதால், பிரதிநிதிகள் சபை வலுவான சபையாக காணப்படுவதில்லை.)

10. பொதுவாக மாநிலங்கள் பிரதிநிதிகள் சபையைவிட செனட் சபை மீதே அதிக அக்கரை காட்டுகின்றன. ஒரு உறுப்பினரை அனுப்பும் சிறிய மாநிலம், தான் இரண்டு உறுப்பினர்களை அனுப்பும் செனட் சபை மீதே அதிக அக்கரை கொள்கிறது.

**செனட் சபை :**

**செனட் சபையின் அமைப்பு:**

செனட் சபை நூறு உறுப்பினர்களைக் கொண்ட சிறிய சபையாகும். அமெரிக்க கூட்டாட்சியிலுள்ள ஐம்பது மாநிலங்களும் ஒரு மாநிலத்திற்கு இரண்டு செனட்டர்கள் வீதம் அனுப்புகின்றன.

**உறுப்பினர்களின் தகுதிகள்:**

ஒருவர் செனட் சபையின் உறுப்பினர் ஆவதற்கு சில தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். அவர் ஒன்பது ஆண்டுகளாவது அமெரிக்க ஐக்கிய நாடுகளின்குடிமகனாக இருந்திருக்க வேண்டும். அவர் முப்பது வயது நிரம்பியவராகவும் எந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அந்த மாநிலத்தில் வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும். எந்த அரசாங்க பதவியும் ஏதேனும் வகிக்கக் கூடாது.

**செனட் சபைத் தலைவர்:**

அமெரிக்கத் துணைக் குடியரசு தலைவர் தான் செனட் சபையின் தலைவராக இருந்து கூட்டங்களுக்கு தலைமை தாங்கி நடத்துகிறார். ஆனால் அவர் செனட் சபை உறுப்பினர் அல்ல. அவர் பொதுவாக வாக்களிப்பது இல்லை. சபையில் சம எண்ணிக்கை வாக்கு அளிக்கப்படும் போதுதான் தனது இறுதி வாக்கை' அளிப்பார். துணைக்குடியரசு தலைவர்

இல்லாத காலங்களில் அவருக்குப் பதிலாக தலைமை தாங்குவதற்காகத் தற்காலிக அவைத்தலைவர் ஒருவரை செனட் சபை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

**செனட் சபையின் அதிகாரங்கள் : -**

1. சட்டம் இயற்றும் அதிகாரம்:

a)சாதாரணசட்டங்களை இயற்றுவதில் செனட்டுக்கு பிரதிநிதிகள் சபைக்குரிய எல்லா அதிகாரங்களும் உள்ளன. சாதாரண மசோதாக்களை முதலில் கொண்டு வருவதற்கும், பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய மசோதாக்களை ஏற்கவும், மாற்றவும், திருத்தவும், மறுக்கவும் செனட் சபைக்கு அதிகாரம் உண்டு.

b) பண மசோதாக்களைப்பொறுத்த வரையில், அவைகளை செனட் சபையில் முதலில் அறிமுகப்படுத்த முடியாதே. தவிர மற்றபடி பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பண மசோதாவை ஏற்றுக் கொள்ளவோ, திருத்தவோ, நிராகரிக்கவோ செனட் சபைக்கு அதிகாரம் உண்டு .

c) இரு சபைகளுக்கிடையே மசோதாக்கள் பற்றிய கருத்து முரண்பாடு ஏற்பட்டால்,

இரு சபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சம எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களைக் கொண்ட குழு அந்த முரண்பாட்டை தீர்க்கும்.

d) இச்சபையின் ஒப்புதலுக்குப்பின்தான் மசோதாக்கள் குடியரசுத் தலைவரால் இசைவு கொடுக்கப்பட்டு சட்டமாக்கப்படுகின்றன.

**2. நிர்வாக அதிகாரம்:**

சட்டம் இயற்றுவதில் மிகுந்த அதிகாரம் பெற்றிருப்பதைப் போல நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துவதிலும் செனட் சபை மிக்க ஆற்றல் பெற்றுள்ளது. அமெரிக்க நிர்வாகத்துறைத் தலைவராக இருக்கும் குடியரசுத் தலைவருக்கு செனட் சபை ஓர் ஆலோசனைக் குழுவாக விளங்குகிறது. குடியரசுத் தலைவர் தனது நிர்வாகத் துறைக்கு வேண்டிய நியமனங்களைச் செய்யுமுன் செனட் சபையின் அறிவுரையையும் ஒப்புதலையும் பெற வேண்டும். இதனால் குடியரசு தலைவர் கட்டுப்பாடு இல்லாமல் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாது. இந்த ஒப்புதல்கள் எல்லாம் சாதாரணமாக ஐம்பது சதவீதத்திற்க மேல் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பப்படி நிறை வேற்ற படுகின்றன. இது தான் 'செனட்டர்கள் இணக்கம்' என்று சொல்லப்படுகிறது.
3. வெளிநாடுகளுடன் உடன் படிக்கை செய்யும் அதிகாரத்தில் பங்கு :

வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு உடல் படிக்கையும் கட்டாயமாக செனட் சபைமுன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் மேற்படி உடன்படிக்கைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. உடன்படிக்கைகளை நிராகரிக்கவும் செய்ய முடியும். உதாரணம், உட்ரோவில்சனின் சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தத்தை செனட் சபை ஏற்க மறுத்து விட்டது. இதனால் அமெரிக்க வெளிநாட்டுற வில் செனட் சபைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. –

**4. நீதித்துறை அதிகாரங்கள் :**

செனட் சபை குற்ற விசாரணை செய்யும் மன்றமாகவும் விளங்குகிறது. இது செனட் சபையின் சிறப்பு அதிகாரமாகும். அரசியல் அமைப்பின்படி குடியரசுத் தலைவரையும், துணைத்தலைவரையும் மற்றும் நீதிபதிகளையும், சிவில் அதிகாரிகளையும் குற்ற விசாரணை செய்து தண்டிக்கும் அதிகாரத்தை செனட் பெற்றுள்ளது பில்கிளிண்டன் மீத செனட்

**சபையின் விசாரணை:**

குடியரசுத்தலைவர் பில் கிளிண்டன் 1999-ம் ஆண்டு செனட் சபையால் பதவியிலிருந்து நிக்கப்பட குற்ற விசாரணை செய்யப்பட்டார். அமெரிக்க அதிபர் மாளிகையின் பணிப்பெண் அழகி மோனிகர் லெவின்ஸ்கியுடன் முறைகேடான பாலியல் உறவு வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். அது தொடர்பான நீதி மன்ற விசாரணையில் பொய்சாட்சி கூறினார், நீதி மன்ற நிர்வாகத்திற்கு தடை ஏற்படுத்தினார். என்ற இரண்டு குற்றச்சாட்டுகள் குறித்து கிளிண்டன் மீது விசாரணை நடைபெற்றது.

**5. பிற அதிகாரங்கள்:**

a) செனட் சபைக்கு அரசாங்க அதிகாரிகளின் ஊழல்களைப் பற்றி விசாரிக்க அதிகாரம் உண்டு. இதற்காக ‘விசாரணைக்குழு’ ஒன்று அமைக்கப்படும். அது அதிகாரிகளின் குற்றங்களை ஆராயும்.

b) இரு சபைகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தாக்க அமைக்கப்படும் இணைப்புக் குழுக்களில் செனட் உறுப்பி களும் இடம் பெறுகின்றார்.

c) அரசியலமைப்பில் திருத்தம், மாற்றங்கள் செய்தல் போன்றவற்றில் செனட் பிரதிநிதிகள் சபையுடன் தனது அதிகாரத்தை பகிர்ந்து கொள்கிறது.

d) துணைக் குடியரசுத்தலைவர் தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காமல் போனால் அதிக வாக்குகள் பெற்ற இரண்டு வேட்பாளர்களில் ஒருவரை செனட் சபை தேர்ந்தெடுக்கும். ப

e) தனது உறுப்பினர்களின் தேர்தல்கள், செலவு கணக்கு, தகுதிகள் ஆகியவற்றை இறுதியாகத் தீர்மானிக்கும் அதிகாரத்தை செனட் பெற்றுள்ளது.

**செனட் சபையின் வலிமைக்கான காரணங்கள்:**

1. திறமையும் அனுபவமும் உள்ள நூறு உறுப்பினர்கள் மட்டுமே கொண்ட ஒரு சிறிய சபைதான் செனட் சபை. எனவே மிக எளிதில் பொருள்களைப் பற்றி விவாதம் செய்து முடிவு செய்ய முடியாது..

2. எல்லா மாநிலங்களிலிருந்தும் சமமான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே மாநிலங்களுக்கு சம பிரதி நிதித்துவ உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

3. செனட் சபை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே செனட்டின் ஆற்றல் வளர்ந்துள்ளது.

4. செனட் சபை நிரந்தரமானது. அதன் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவதால் செனட் தொடர்ச்சியாக பணியாற்ற முடிகிறது.

5. குடியரசுத் தலைவரின் சில நிர்வாக அதிகாரங்களை செனட் பகிர்ந்து கொள்கிறது. 'உயர் அதிகாரிகளின் நியமனங்களும் சர்வதேச உடன்படிக்கைகளும் செனட்சபையில் உறுதி செய்யப்பட்டால்தான் செல்லுபடியாகும்' என்று அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளதால் செனட்சபை சிறப்பு பெறுகிறது.

6. செனட் சபைக்கு அனுபவமிக்க அரசியல் வல்லுநர்களே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அனேக செனட்டர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதால் அனுபவ முதிர்ச்சி அடைகிறார்கள். எனவே சட்டமியற்றுவதில் வல்லுநர்களாகக் கருதப்படுகிறார்கள்.

7. செனட்டர்களின் தகுதிகளும் பண்பும் உயர்ந்தவை அரசியல்வாதிகள் செனட்சபையில் உறுப்பினர்களாவதையே அதிகம் விரும்புகின்றனர். ‘நாவன்மை மிக்க வழக்றிஞர்கள், புகழ்பெற்ற தளபதிகள், அறிவுமிக்க நீதிபதிகள், பெயர்பெற்ற அரசியல் வல்லுநர்கள் ஆகியோர்களைக் கொண்டதுதான் செனட்' என்று நூற்றியிருபது ஆண்டுகளுக்கு முன்னரே டி -டாக்வில் என்ற அரசியல் அறிஞர் குறிப்பிட்டது மிகவும் உண்மையே!

8. செனட் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். அவர்களது பேச்சுரிமையை செனட் சபை கட்டுப்படுத்த முடியாது.

9. சட்டம் இயற்றும் துறையில் இது கீழ் சபையான பிரதி நிதிகள் சபையுடன் சம உரிமை பெறுகிறது. செனட் சபையின் ஒப்புதல் இல்லாமல் சட்டம் உருவாக்கவே

முடியாது. -

10. நிதி மசோதாக்கள் மீதும், சாதாரண மசோதாக்கள் மீதும் பிரதிநிதிகள் சபையைப் போன்றே அதிகாரம் பெற்றுள்ளது...

11. குடியரசுத்தலைவரின்துரோக குற்ற விசாரணையை செனட் சபையே நடத்துகிறது.

**சட்டம் ஏற்றும் முறை:**

**மசோதாக்களைத் தோற்றுவித்தல் :**

அமெரிக்க காங்கிரசில் தோற்றுவிக்கப்படும் மசோதாக்கள் இரண்டு வகைப்படும். 1) பொது மசோதாக்கள் 2) தனியார் மசோதாக்கள். பொது மசோதாக்கள் என்பது பொது மக்களைப் பாதிப்பவைகளாகவும், அரசாங்கக் கொள்கைகள் அடங்கியவைகளாகவும் இருக்கலாம். (தனியார் மசோதாக்கள் தனியாரையோ, ஒரு குழுவையோ. நிறுவனத்தையோ பற்றியதாக இருக்கலாம்.)

இதைத் தவிரகாங்கிரசில் இணைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றது. இவைகளுக்கும் மசோதாக்களுக்கும் அதிக வேறு பாடுகள் இல்லை . அடுத்து இரண்டு சபைகளின் கருத்துக் களைப் பிரதி பலிக்கும் 'கூட்டுத் தீர்மானங்கள்' தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப் படுவதில்லை. 'சபைத் தீர்மானங்கள்' என்பதும் சட்டபூர்வமானவை அல்ல.

அமெரிக்க அரசியலமைப்பின் படி பண மசோதாக்கள் பிரதி நிதிகள் சபையில்தான் தோற்றுவிக்கப்படவேண்டும் மற்ற மசோதாக்கள் பிரதிநதிகள் சபையிலோ, செனட் சபையிலோ தோற்றுவிக்கப்படலாம். ஆனால் மற்ற நாடுகளைப் போலவே பெரும்பாலான மசோதாக்கள் கீழ்சபையான பிரதிநிதிகள் சபையிலேயே தோன்றுகின்றன.

மசோதாக்கள் அறிமுகப்படுத்துதல் ஒரு மசோதா பிரதிநிதிகள் சபையில் அறிமுகப்படுத்துப்படுவதாக வைத்துக் கொள்வோம். மசோதாவை அறிமுகப்படுத்தும் உறுப்பினர்

அமெரிக்காவின் முதன்வாழிப்பு என்

அதில் தனது பெயரை எழுதி கையெழுத்திட்டு சபையின் எழுத்தர் மேஜையின் மீது இருக்கும் பெட்டியில் போட வேண்டும். மசோதாவின் தலைப்பு உடனடியாக காங்கிரஸ் இதழில்' (Journal) பதிவு செய்யப்படும் பின் மசோதாவின் வரிசை எண் அச்சடிக்கப்பட்டு எல்லா உறு" களுக்கும் கொடுக்கப்படுகிறது. இதுவே ஒரு மசோதாசட்டமாக நீண்ட பாதையின் முதல் கட்டமாகும்.

**குழுக்கட்டம்:**

அடுத்த கட்டமாக அச்சிடப்பட்ட மசோதாக்கள் சம்பந்தப்பட்ட நலைக்குழுக்களுக்கு அனுப்பப்படும். உதாரணமாக விவசாயம் சமபந்தப்பட்ட மசோதா விவசாயக் குழு' வின் பரிசீலனைக்கும் கல்வி பற்றிய மசோதாக்கள் கல்விக் குழுவின் பரிசீலனைக்கும் விடப்படும்.

**பதிவேட்டுக் கட்டம்:**

முதல் பதிவேட்டில் பண மசோதாக்களான வரவு செலவுத்திட்டம், நிதி ஒதுக்கீடு மசோதா ஆகியவை இடம் பெறுகின்றன. இரண்டாவது பதிவேட்டில் பண மசோதாக்கள் நீங்கலாக மற்ற எல்லா மசோதாக்களும் பதிவு செய்யப்படுகின்றன. மூன்றாவது பதிவேட்டில் தனியார் மசோதாக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

**இரண்டாம் வாசிப்பு:**

முக்கியமான  மசோதாக்களை பிரதிநிதிகள் சபை ஆய்வுக்குழு எடுத்து

கொள்கிறது. இது இரண்டாம் வாசிப்பு ஆகும். பிரதிநிதிகள் வயில் விவாதங்கள் ஆரம்பிக்க குறைந்த அளவு நூறு உறுப்பினர் கவாவது இருந்தாக வேண்டும். இச்சமயத்தில் பிரதிநிதிகள் சபை விதிகளை தளர்த்தி சபை முழுக் குழுவாக

அமர்ந்து விவாதிக்கிறது.

**மூன்றாம் வாசிப்பு:**

அடுத்ததாக, மசோதா திருத்தங்களை உள்ளடக்கிய புது உருவில் அச்சிடப்பட்டு மூன்றாம் வாசிப்புக்குத் தயாராகும். இந்த முறை மசோதாவின் தலைப்பு மட்டும் வாசிக்கப்படும்.

**செனட் சபையில் மசோதா:**

பிரதிநிதிகள் சபையால் செனட் சபைக்கு அனுப்பப்படும் மசோதாக்களை செனட் சபை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் திருத்தங்களைக் கொண்டு வரலாம். மசோதாவை நிராகரிப்பதற்கு செனட் சபை உறுப்பினர்கள் ஒரு வழி முறையைப் பின்பற்றுகிறார்கள் அதற்கு பிலிபஸ்டர் முறை (Filibuster) என்று பெயர்.

இந்த பிலிபஸ்டர் முறையைப் பின்பற்றி செனட் உறுப்பினர்கள் மசோதாவை இயற்ற விடாமல் செய்து விட முடியும், அதாவது செனட் சபையில் உறுப்பினர்கள் பேசுவதற்கு எந்த கால அளவும் கிடையாது. கட்டுப்பாடும் கிடையாது. உறுப்பினரின் உடல் வலிமை எவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதிக்கிறதோ அவ்வளவு நேரம் சபையில் தான் ஒருவர் மட்டுமே பேசிக் கொண்டிருக்கலாம். மசோதா பிடிக்கவில்லையென்றால் சில உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டு ஒருவர் பின் ஒருவராக, மணிக்கணக்கில், நாள்கணக்கில் பேசியே சபையின் நேரத்தையெல்லாம் தாங்களே எடுத்துக் கொண்டு மசோதாவை இயற்றவிடாமல் தடுத்து கடைசியில் குற்றுயிராக்கி மடியச் செய்கிறார்கள். இந்தக் கட்டுப்பாடற்ற பேச்சுரிமை' பிலிபஸ்டர்' எனப்படுகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சட்டமியற்றும் முறையில் உள்ள வேறுபாடுகள்

1இங்கிலாந்தில் பொது மசோதாக்கள் அமைச்சர்களாலும், தனியார் மசோதாக்கள் தனி உறுப்பினர்களாலும் அறிமுகப்படுத்தப் படுகின்றன. தனி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு குறைவு ஆனால் அமெரிக்க காங்கிரசில் பொது மசோதா, தனி மசோதா ஆகியவைகள் சாதாரண உறுப்பினர்களாலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

2.இங்கிலாந்தில், அமைச்சர் குழுவை சார்ந்தவர்களே மசோதாக்களை அறிமுகப்படுத்தி சட்டமாக்க முனைவர். ஆனால் அமெரிக்காவில் அமைச்சர்குழுவைச் சார்ந்தவர்கள் சட்டமியற்றும் பணியில் பங்கு கொள்ள முடியாது.

3.இங்கிலாந்தில் அரசாங்க மசோதாக்களை பொதுமக்கள் சபை ஏற்க மறுத்துவிட்டால் அமைச்சர் குழு பதவியிலிருந்து விலக வேண்டும். ஆனால் அமெரிக்காவில் அவ்வாறு இல்லை.

4.இங்கிலாந்தில் முதலில் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகே நிலைக்குழுக்களின் பரிசீலனைக்கு மசோதாக்கள் அனுப்பப் படுகின்றன.

நிலைக்குழுக்கள் மசோதாக்கள் ஏற்கத்தக்கவையா அல்லவா என்ற முடிவை சபைக்குத் தெரிவிக்கும். ஆனால் அமெரிக்காவில் எடுத்த எடுப்பில் அதாவது முதல் வாசிப்பு முடிந்த உடனேயே நேராக குழுக்களுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன.

5.அமெரிக்காவில் குழுக்கள் மசோதாக்களை சிதைக்கவும், உருக்குலைக்கவும் அதிகாரம் பெற்றுள்ளன. பெரும்பாலான மசோதாக்கள் குழுக் கட்டத்திலேயே மடிந்து விடுகின்றன. ஆனால் இங்கிலாந்தில் குழுக்களுக்கு இத்தகைய அதிகாரம் கிடையாது. இங்கிலாந்தில் குழுக்களின் பரிந்துரைகளை பொதுமக்கள் சபை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் அமெரிக்க குழுக்கள் தங்களிடம் அனுப்பபடும் மசோதாக்களை மாற்றுவதுடன் புதிய மசோதாக்களை தயாரித்து அனுப்பலாம். எனவே இங்கிலாந்து பாராளுமன்றக் குழுக்களைவிட அமெரிக்க குழுக்கள் வல்லமையுடன் விளங்குகின்றன.

6.இங்கிலாந்தில் பணமசோதாக்களை அறிமுகப்படுத்தும் உரிமை அரசாங்க தரப்பு உறுப்பினர்களுக்கு மட்டுமே உண்டு. ஆனால் அமெரிக்காவில் அரசாங்க மசோதாக்கள். சாதாரண மசோதாக்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லாமே சாதாரண உறுப்பினர்களால் தோற்றுவி: படுகின்றன.

7.இங்கிலாந்தில் பண மசோதாக்கள் கீழ்சபையான பொதும் சபையில்தான் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இச்சபையா நிறைவேற்றப்பட்ட பிறகு மேல் சபையான பிரபுக்கள் சபை அனுப்பப்படும். பிரபுக்கள் சபை அதனை நிராகரித்தாலும் ஒரு மா காலத்திற்கு பிறகு அது சட்டமாகிவிடும். மேலும் பிரபுக்கள் சபை பண மசோதாக்களுக்கு திருத்தங்களும் கொண்டுவர முடியாது. ஆனால் அமெரிக்காவில் கீழ் சபையான பிரதிநிதிகள் சபையிலிருந்து வரும் பண மசோதாக்களை ஏற்றுக் கொள்ளவோதிருத்தவோ நிராகரிக்கவோ செனட் சபைக்கு அதிகாரம் உண்டு.

8.இங்கிலாந்தில் பொதுமக்கள் சபை பிரபுக்கள் சபையின் சம்மதம் பெறாமலேயே சட்டங்கள் இயற்ற முடியும். ஆனால் அமெரிக்காவில் இரு சபைகளின் இசைவைப் பெறாமல் சட்டமியற்றுவது என்பது இயலாத காரியம், சட்டமியற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரை அமெரிக்காவில் இரு சபைகளுக்கிடையே உயர்வு தாழ்வு இல்லையென்று கூறலாம்.

9.அமெரிக்காவில் இரு சபைகளுக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால் மசோதாக்கள் இரண்ட சபை உறுப்பினர்களைக் கொண்ட இணைப்புக்குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் இங்கிலாந்தில் இத்தகைய இணைப்புக் குழுக்கள் கிடையாது.

10.இங்கிலாந்தில், பாராளுமன்றத்தால் இயற்றப்படும் மசோதாக்களுக்கு அரசியார் இசைவு தெரிவிப்பதே மரபாக உள்ளது. இசைவு மறுக்கப்படுவதில்லை. ஆனால் அமெரிக்காவில் இரு சபைகள் இயற்றிய மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவது அவ்வளவு எளிதன்று. குடியரசுத்தலைவரின் மறுப்பாணை, தடுப்பாணை, பையுரை அதிகாரம் ஆகியவற்றின் மூலம் பல மசோதாக்கள் மறுக்கப்பட்டு சட்டங்களாக முடியாமல் கைவிடப்பட்டிருக்கின்றன.